
முத்து
சுபா
யிரே
றங்காதே

**சுபா**





# உயிரே உறங்காதே!

**1**

**ப**ட்சிகள் கூவின காலை. என் அறையின் ஜன்னலுக்கு வெளியே நான் மிக மிக ரசிக்கும் அந்த மரத்தின் கிளைகள் விரிந்து விரிந்து, நீண்டு நீண்டு தன் வாழ்க்கையை விரிவுபடுத்திக்கொண்டே

இருந்தது.

அந்த மரத்தின் பெயர் எனக்குத் தெரியாது. ஆனால், அது ஒரு நிரந்தரக் கன்னி மாதிரி. யார் பார்த்தாலும் ரசிக்கச் சொல்லும் மரம். கிளைகளில் தோரணம் தோரணமாய் எலுமிச்சை மஞ்சளில் பூக்கள் தொங்கின. ஒரு வேளை சரக்கொன்றையோ? இல்லை... குல்மொஹரோ?

தெரியவில்லை. அதற்கு என்ன பெயர் என்று யாரையும் கேட்டுத் தெரிந்துகொள்ளவும் விருப்பமில்லை. ஒன்றைப் பற்றியோ, ஒருவரைப் பற்றியோ ரொம்பத் தெரிந்துவிட்டாலும், கவர்ச்சி போய்விடுகிறது.

படுக்கையில் இருந்து எழுந்தேன். பக்கத்தில் சுதாமதி தூங்கிக்கொண்டிருந்தாள். அவள் தூங்குவதே ஓர் அழகு. இன்றெல்லாம், நாளையெல்லாம், வாழ்நாள் எல்லாம் பார்க்கக்கூடிய ஓர் அழகு. மின்விசிறி காற்றில் அவள் தலையின் முன் முடியில் அலைகள். மெல்லிய பருத்தி பராக், வியர்வையில் அவள் உடலில் ஒட்டி இருந்தது. அவள் மேல் உதடில் ஊசி முனைகளாய் வியர்வை.

'தூங்கும் யாருக்கும் முத்தம் கொடுக்கக் கூடாது' என்பார்கள். எனக்கு ஆசை விடவில்லை. அவள் உதடுகளில் என் உதடுகளைப் பதித்தேன். கட்டிலில் இருந்து இறங்கினேன். ஜன்னலுக்கு அருகே போய் நின்றேன்.

இன்னும் சூரியனால் சூடாக்கப்படாத காற்று. ஜன்னல் திறப்பு வழியே என் உடலில் படர்ந்தது. 'ஜில்'லென்று இருந்தது. சிலிர்த்தது. மரக்கிளையை நோக்கினேன். குருவிகளும், காகங்களும், காடைகளும், மைனாக்களும், இன்னும் இன்னும் இன்னும் நிறைய பெயர் தெரியா பறவைகளும் கிளைகளில் ஒளிந்து ஒளிந்து ஒளிந்து அங்கங்கே உட்கார்ந்திருந்தன. ட்ர்ர்ர்க்... ட்ர்ர்ர்ர்க். சிட்... சிட்... சிட். க்கூய்... க்க்கூய்... அக்க்கூய்.

பூபாள இசைக் கச்சேரி. எனக்கு இந்த நேர வாழ்க்கை மிகவும்



பிடிக்கிறது. நான், மரம், கிளைகள், பட்சிகள், சுதாமதி, காற்று, பறவை, சங்கீதம், விடிகாலை வேளை. போதும், வாழ்க்கை இந்த நிலையிலேயே உறைந்து கழிய வேண்டும். நான் மிக சந்தோஷமாகச் செத்துப் போவேன்.

தினம் தினம் நினைத்துக்கொள்வதுதான். ஆனால், நான் என்ன ரிஷிபத்தினியா? சூரியனை 'கடலிலேயே மூழ்கி இரு' என்று உத்தரவிட! ம்ஹூம்... முடிவதில்லை. சூரியன் எழுந்துவிடுகிறான். கொஞ்சம் கொஞ்சமாய் வெப்பத்தை அதிகரித்து, நேரத்தை நினைவுபடுத்துகிறான். பசிக்கத் தொடங்கிவிடும். சுதாமதிக்கு என்னதான் சின்ன வயிறென்றாலும், அவளுக்கும் பசிக்கும். சாப்பிட வேண்டும். சாப்பிடுவதற்குப் பணம் வேண்டும். பணத்திற்கு வேலை வேண்டும்.

மதி ஓடு. நேரமாகிவிட்டது. குளி. உடை மாற்று. ஆபீஸ் போ. செயற்கையாய் சிரி. டைப்ரைட்டரை நேசி. மாலைக்குள் அழுக்காகிப் போ. உன் ஒருநாள் உணவு நிச்சயிக்கப்படும். ப்ச். என்ன வாழ்க்கை இது! சுதாமதி மட்டும் இல்லையென்றால்...

இல்லையென்றால்...?

நான் தலையை அசைத்து நினைவுப் புகையை விரட்டி அடித்தேன். குளியலறைக்குள் நுழைந்தேன். வென்டிலேட்டரின் லூவரை இறக்கிவிட்டு, உடைகளைக் களைந்தேன். 'நைட்டி' என் காலடியில் வீழ்ந்தது. 'வென்டிலேட்டர் லூவர்' கண்ணாடிகளை இறக்கி– அறைக்குள் யாரையும் பார்க்கவிடாமல் தவிர்த்தாலும், என் பார்வை இயல்பாக வென்டிலேட்டரை நோக்கியது. நல்லவேளை! வெளியில் இருக்கும் எதுவும் தெரியவில்லை. ஒரு தடவை எதிர் பிளாட் சிஸ்டத்தின் நான்காவது மாடியின் பால்கனியில் இருந்து, அந்த காலேஜ் பையன்– திறந்திருந்த என் குளியலறை வென்டிலேட்டர் வழியாக என்னை, என் உடலைப் பார்க்க முயன்று கொண்டிருந்ததை நான் பார்த்துவிட்டேன்.

அன்றையில் இருந்து இப்படித்தான்! ஆடையைக்

களைந்தாலே உள்ளுக்குள் ஒரு மாதிரி தற்பாதுகாப்பற்ற உணர்ச்சி. அவனை பார்த்துவிட்டால் என்ன? ஒன்றுமில்லைதான்! அழகை ரசிப்பது என்பது எல்லோருக்கும் பொதுவான ஒரு ரசனைதான். ஆனால், அவனை நான் கெடுத்த மாதிரி ஆகிவிடும். கல்லூரிப் பையன். படிக்க வேண்டும். வேலையிலோ, வியாபாரத்திலோ ஈடுபட்டு முதலில் வயிற்றுப்பாட்டிற்கு ஒரு நிரந்தர தீர்வு காண வேண்டும். அவனை நம்பி எத்தனை பேரோ? வயதான அம்மா, அப்பா, கல்யாணத்திற்கு நிற்கும் தங்கையும், அக்காவும். தான் படித்து முன்னேற பணம் கேட்கும் தம்பி. வாழ்க்கையில்தான் எத்தனை கடன்கள்? அதற்குள் அந்தப் பையனை 'செக்ஸ்' பற்றி யோசிக்க வைத்து, ஒரு வக்கிர புத்திக்காரனாக மாற்றி, வாழ்க்கையை மறப்பதற்கு நான் காரணமாக இருக்க விரும்பவில்லை.

குளியலறையில் என் உயரத்திற்குக் கண்ணாடி இருந்தது. என் உடலை நானே ரசிக்க எனக்கு பார்த்துக்கொண்டேன். உடலில் ஒரு கையளவு துணியின்றி இயற்கை மிகவும் பிடிக்கும். என் உடல், எனக்கு இருக்கும் உருக்கொடுத்தபடி இருக்கும் ஒரு சினிமா நட்சத்திரத்திற்கு இருந்தால் அவள் அமைப்பு– கோடி கோடியாகப் பணத்தைக் குவித்திருப்பாள் என்று சுதா சொல்வதுண்டு.

சுதா என்றால் சுதாமதி இல்லை. இது வேறு. நான் அப்புறம் சொல்கிறேனே. எனக்கு வயிறு குழைந்திருந்தது. ஒரு சுருக்கமற்ற வயிறு. பல ரக எண்ணெய்கள் என் டெல்லி வீட்டு 'டிரெஸ்சிங் டேபிளி'ல் புட்டி புட்டிகளாக அணிவகுத்து நின்றிருந்த காலத்தில் இந்த சுருக்கங்கள் எதுவும் இல்லாமல் போனது. சுதாவுக்கு நன்றி. சுதா வாங்கிக்கொடுத்தவைதான் அத்தனை பாட்டில்களும். நான் ஒரு மாசுவும் இன்றி மழமழப்பாக இருக்க வேண்டுமாம். சுதாவின் விருப்பம். எனக்கு சுதாவின் விருப்பத்திற்கு அடிபணிவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. ஏனெனில்... ஏனெனில்...

காலையில் ஏன் சுதாவைப் பற்றி, அப்புறம் இன்று முழுக்க



'மூட் அப்செட்' ஆகிவிடும். நான் மருந்து தின்ற குரங்கு போல் முகத்தை வைத்துக்கொண்டு விடுவேன். ஆபீசில் யாருக்கும் அந்த முகம் பிடிக்காது. நான் சிரிக்க சிரிக்க இருக்க வேண்டும். பேச வேண்டும். 'சென்ட்' வாசனையுடன் உலாவ வேண்டும். தழையத் தழைய சேலை கட்ட வேண்டும். ஒரு சரம் அடர் மல்லியை என் உதிர் கூந்தலில் சூட்ட வேண்டும். என் கக்கத்தில் லேசான வியர்வை ஈரம் இருக்க வேண்டும். என் உடலின் வனப்புகள் ரகசியமாகவும், ரகசியமற்றதாகவும் இருக்க வேண்டும். யூகங்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். அப்படித்தான் ஆபீஸ் என்னை விரும்புகிறது. வரவேற்கிறது. அப்படித்தான் நான் இருக்கிறேன்.

குளியலறையில் சிறிது நேரம் உடற்பயிற்சி. முன்னால் வளைவு, பின்னால் வளைவு– வயிற்றில் கூடுதல் சதை ஏறாமல் இருக்க. வலது பக்கம் ஒரு சாய்வு, இடது பக்கம் ஒரு சாய்வு– இடுப்பில் வண்டிச் சக்கரம் விழாமல் இருக்க. அப்புறம கால்களை தொம் தொம் என்று என் எல்லா பாரமும் கொடுத்து குதிக்காமல், மெத் மெத் என்று பூனை குதியாக ஐநூறு முறை 'ஸ்கிப்பிங்' செய்தேன்– உடம்பில் எடை ஏறாமல் இருக்க!

வியர்த்துவிட்டது. 'ஸ்பிளாஷ்' என்று குளிர்நீரை முகத்தில் அறைந்தேன். 'பிரஷ்' பண்ணினேன். சந்தன சோப்பு உபயோகித்துக் குளித்தேன். ஷாம்பூவால் முடியை அலசினேன். தேங்காய்ப்பூ டவலால் உடலை ஒற்றி எடுத்தேன். களைந்த 'நைட்டி'யையும், டவலையும் முதல் நாள் சேலையையும், சேலையின் கூடவே சேர்ந்து வரும் ஜாக்கெட்டையும், பிராவையும் 'வாஷிங் மெஷினி'ல் போட்டு 'ஆன்' செய்தேன். புதிதாகத் தேர்ந்தெடுத்து வைத்திருந்த பச்சைநிற பருத்திச் சேலையை எடுத்துக் கட்டினேன். ஸ்டார்ச்சில் முக்கி எடுத்து இஸ்திரி செய்யப்பட்ட சேலை. என் மெல்லிய உடலுக்கு லேசாகப் பருமனைக் கூட்டிக் காட்டியது. 'பிரா'வை மாட்டி, ரவிக்கையைஅணிந்து 'அட்ஜஸ்ட்' செய்து இறக்கி விட்டுக்கொண்டேன். லேசாக 'கிளிவேஜ்' தெரிந்தது.

பரவாயில்லை. மவுனமாய் ரசிப்பவர்களுக்கு போனஸ்.

சேலையை இடுப்பிற்குக் கீழே இறக்கினேன். என் 'நேவல் பாய்ன்'டை காட்டி, அதன் அடி விளிம்பைத் தொட்டு, சேலையின் மேல் விளிம்பு என் உடலை கவ்வி இருந்தது. தலைப்பை எடுத்துப் படரவிட்டேன். சென்டை எடுத்து விசிறி விட்டேன். குளியலறையே அப்போது பறித்து மலர்ந்த மல்லிகையின் மணத்தை விசிறிக்கொண்டது. பிளாஸ்டிக் கியூபிகலில் உட்கார்ந்து ஹீட்டரில் என் ஈரத் தலைமுடியை கோதிக்கொண்டேன்.

கீழே முதல் மாடியின் எட்டாவது பிளாட் ரவிச்சந்திரனை பள்ளிக்கூடத்துக்குக் கூட்டிப் போகும் வேனின் 'ஹாரன்' ஒலி கேட்டது. ஏழரை மணி காய்கறிக்காரியின் குரல் ராகமாய்க் கேட்டது. கூடவே கீழே பிளாட் சிஸ்டத்தைச் சுற்றி இருக்கும் மண் தரையில், காய்கறிக்காரியின் இரும்புப் பட்டை பொருத்தப்பட்ட சக்கரம் சுற்றி மணல் தேய்த்து எழுப்பும் நர நர ஒலி கேட்டது.

ஐயையோ. ஐ ஆம் லேட். இன்றைக்கு ஆபீசில் ஒரு முக்கியமான ஸ்டேட்மெண்ட்டை டைப் அடிக்க வேண்டும். காலையிலேயே வந்துவிடுமாறு மானேஜர் சொன்னது நினைவிற்கு வந்தது.

நான் எழுந்தேன். டிரையரை 'ஆப்' செய்துவிட்டு, குளியலறையைவிட்டு வெளியே வந்தேன்.

"மம்மி. குட்மார்னிங்" என்றாள், படுக்கையில் அமர்ந்து எனக்காகக் காத்திருந்த சுதாமதி. குட்டி எனக்கு முன்னால் தயாராக இருந்தது. குளித்து, தலைசீவி, நட்சத்திர வடிவில் ஒரு பொட்டு வைத்து, பவுடர் தீற்றிக்கொண்டு, அரிசிப் பற்களைக் காட்டிச் சிரித்தாள்.

"குட்மார்னிங் டார்லிங்" என்றேன். அவளை இன்னொரு முறை உதட்டில் முத்தமிட்டேன்.

"நல்ல வாசனையா இருக்கே அம்மா."

"ம்... அப்படியா?"



"நல்ல அழகா இருக்கே அம்மா."

"ஏய்... போக்கிரி."

"நான் ஒன்னைக் கல்யாணம் பண்ணிக்கவா?"

"ஏய்... என்ன இது? யார் ஒனக்கு இப்படிப் பேசக் கற்றுக்கொடுத்தது?"

"ஏன்? ரவிச்சந்திரன் சொன்னானே. அழகா இருக்கறவங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா ஜம்னு இருக்கும்னு."

"சொல்லுவான்... சொல்லுவான். ஏதாவது குடிச்சியா?"

"ம்" என்றாள் சுதாமதி, தலையை இருபுறத்திலும் ஆட்டி. எலி வால் போல்– இறுக்கமாகப் பின்னப்பட்ட பின்னலும் ஆடியது. இந்தப் பின்னல், இந்த அலங்காரம் எல்லாம் நாராயணியின் வேலையாக இருக்கும்.

"வா... டிபன் சாப்பிடலாம்."

சுதாமதி படுக்கையில் இருந்து 'ஜம்ப்' செய்து கீழே இறங்கினாள். என் ஆட்காட்டி விரலைப் பிடித்து முத்தமிட்டுக்கொண்டே நடந்து வந்தாள். படுக்கை அறையிலிருந்து வெளிப்பட்டு, ஹாலின் மூலையில் இருந்த டைனிங் டேபிளை நோக்கி நடந்தேன்.

மேசை மேல் ஹாட்பாக்ஸ் மூடி இருந்தது. நான் ஒரு இருக்கையை இழுத்துவிட்டு உட்கார்ந்தேன். அடுத்த சேரில் ஒரு திண்டு– சுதாமதிக்காக. அவளுக்கு மேசை எட்ட வேண்டுமல்லவா?

சுதாமதி உட்கார்ந்தாள்.

"நாணுப்பாட்டி, இட்லி" என்று கூவினாள்.

நாராயணி சமையல் அறையில் இருந்து வெளியே வந்தாள். சுதாமதி பாட்டி என்று அழைக்கும் வயதில்தான் இருந்தாள் நாராயணி. முடி வெண்மை படர்ந்திருந்தது. தளரவிட்டிருந்த முடியில் கீழே ஒரு முட்டையாய் முடிச்சுப் போட்டிருந்தாள். அதிலிருந்து ஈரம் கசிந்து நாராயணியின் வெள்ளை மல் ஜாக்கெட்டை நனைத்து, அவளது சுருக்கங்கள் நிறைந்த கருப்பான

முதுகைக் காட்டியது.

நாராயணியின் நெற்றியில் சந்தனக் கீற்று, கொஞ்சம் நீளவாக்கு முகம், மேல் பல் வரிசை கொஞ்சம் எல்லை மீறியதால்- மூடி இருக்கும் மேலுதடு, கீழுதடை மீறிக்கொண்டு வெளியே வந்த மாதிரி தெரியும். நாராயணிக்கு என்னை விட்டால் யாருமில்லை. அதனால் இந்த வீட்டிலேயே சமையல்காரியாக, வேலைக்காரியாக, காவல்காரியாக, பாட்டியாக, அம்மாவாக, ரட்சகியாக ஆகிவிட்டாள்.

நாராயணிக்கு என் மேல் அபரிமிதமான பிரேமை, பற்று. நான் முகம் வாடினால் பதறுபவள்–என் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே என்று ரகசியமாகக் குமுறி அழுபவள். பெண்ணுக்குப் பெண் அந்த இரக்க உணர்ச்சி எப்போதும் இருக்குமோ என்னவோ!

ஹாட் பாக்சைத் திறந்தாள். ஆவி பறக்க இட்லிகள். நன்றாகத் துடைத்த தட்டில் எனக்கு இரண்டு இட்லிகள் வைத்தாள். சுதாமதிக்கு இரண்டு இட்லிகள் வைத்தாள். நெய்யை சுதாமதியின் இட்லி மீது ஊற்றித் தடவி, ஸ்பூனால் அங்கங்கே கீறினாள். தேங்காய்ச் சட்னியை தாளித்த கடுகு மிதக்க எடுத்து கொஞ்சமாய் ஊற்றினாள்.

“சாப்பிடு குழந்தே.”

“எம் பேரு குழந்தே இல்லை.”

“பின்னே?”

“நான் சுதாமதி! எஸ். சுதாமதி.”

“சரி, வாயாடி. சாப்பிடு” என்றேன் நான்.

எஸ். சுதாமதி. வேண்டாம். அதை நினைக்க வேண்டாம்.

நான் மவுனமாக இட்லி சாப்பிட்டு எழுந்தேன். நாராயணி ...ற்றிக் கொடுத்த காப்பியைக் குடித்தேன்.

“அம்மா, எனக்கும் காப்பிம்மா.”

“ச். நீ சத்தாதான் குடிக்கணும்.”



“மாங்கோ பானமா? ஐஸ்கிரீம் பானமா?”

“எது வேணா.”

“காப்பி குடிச்சா என்னம்மா?”

“காப்பி குடிச்சா நீ என்னை மாதிரி கருப்பாயிடுவே.”

“போ நாணுப்பாட்டி. பின்னே அம்மா குடிக்கறாங்களே. அவுங்க ஒண்ணும் கருப்பாகலியே. நல்லா செவப்பா, அழகாகத்தானே இருக்காங்க.”

“உஷா. என்னால ஜெயிக்க முடியாது. நீதான் சொல்லணும்.”

“மதி கண்ணா. காப்பியெல்லாம் பெரியவங்கதான் குடிக்கணும். ஒன்னை மாதிரி குட்டி பாப்பால்லாம் காப்பி குடிக்கக் கூடாது. குடிச்சா வாந்தி ஆயிடும். என்ன?”

“சரி. நான் பெரியவளா ஆனப்பறம் காப்பி குடிப்பேன்.”

“சரி.”

“பத்து தம்ளர்.”

“சரி.”

“இருபது தம்ளர்”

அவள் கன்னத்தைத் தட்டினேன். “சரி” என்று சம்மதம் தெரிவித்தேன். சுதாமதி சந்தோஷப்பட்டாள். நாராயணி சினிமா அம்மாக்கள் போல, விழியோரம் எட்டிப் பார்த்த நீரைத் துடைத்துக்கொண்டாள்.

“நீ நாணுப்பாட்டி கூடவே இருக்கணும்.”

“சரி.”

“யார்கிட்டயும் சொல்லாம நீயா ‘லிப்ட்’ல எல்லாம் எறங்கிப் போகக் கூடாது.”

“சரிம்மா. நான் என்ன சின்ன பாப்பாவா? தினம் இதையே சொல்றியே? வெயில்ல வெளையாடப் போகலை. மாடிப்படி

எறங்கலை. ஒய்.ரவிச்சந்திரன், ஆர்.கல்பனா கூடல்லாம் சேர்ந்து ஓடலை. நீ பயப்படாம ஆபீஸ் போயிட்டு வா. என்ன?"

நான் என் பிரமிப்பை மறைத்துக்கொள்ளச் சிரமப்பட வேண்டியிருந்தது. கைப்பையை எடுத்து சில்லறை இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டு, கதவை நோக்கி நடந்த நேரத்தில்–

"அம்மா, முத்தா."

குனிந்து முத்த ஒத்தடம் கொடுத்தேன். கதவைத் திறந்து வெளிப்பட்டு 'லிப்ட்'டை அடைந்து, பித்தான் அழுத்திக் காத்திருந்து– கீழிறங்கி, கட்டடத்தின் வாசலுக்கு வந்தேன். ஒரு பெரிய எல்லைக்குள் அடுக்கி வைத்த தீப்பெட்டிகள் போல அடுக்குமாடி கட்டடங்கள் ஏழு அடுக்குகளாக, எட்டு அடுக்குகளாக உயர்ந்திருந்தன.

நடமாடும் சலவை வண்டியில் கரி சூடேறிக்கொண்டு இருந்தது. பான் வாலா துர்காலால் காலையிலேயே சுறுசுறுப்பாகி இருந்தான். நான் 'காம்பவுண்டு கேட்' அருகே வேகத்தடைகள் போல போடப்பட்டிருந்த நெருக்கமான இரும்பு உருளையில் செருப்பு சிக்காமல் நடந்து, கடந்து வெளியில் வந்து ஆட்டோ பிடித்தேன்.

பொதுவாக பஸ்தான், ஏராள மனிதர்களின் நடுவில் மூச்சு திணறி, உடல் வெப்பம் உணர்ந்து, வியர்வையில் குளித்துப் போகும் பயணம்தான். இன்றைக்கு அவசரம்.

ஆபீஸ் தேனாம்பேட்டையில். அண்ணாசாலையில் ஐந்து மாடிக் கட்டடம். எல்லாம் கிடைக்கும். எல்லாம் என்றால் எல்லாமே. அதன் நிர்வாக அலுவலகத்தில் நான் டைப்பிஸ்ட். அது டெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, திருவனந்தபுரம் என்று எல்லா முதல் தர நகரங்களிலும் கிளை உடைய ஒரு ாபெரும் ஆலமரம்.

நான் என் நாற்காலியில் உட்கார்ந்தேன். பெரிய ஹால். அதன் ஒரு த்தில் மரத்தால் ஆன காபின்களில் 'எக்ஸிக்யூட்டிவ்'கள்.



முழுக்க முழுக்கக் கண்களை உறுத்தாத இளநீல தரைவிரிப்புக் கம்பளங்கள். சுவர்களில் இளநீல பிளாஸ்டிக் எமல்ஷன் பெயின்ட். ஒவ்வொரு மேசையிலும் இளநீல லாமினேஷன். டைப்ரைட்டரின் ரெக்ஸின் மூடியை 'ஜிப்' நீக்கி விடுவித்தேன். வேலையில் ஆழ்ந்தேன்.

பன்னிரண்டு மணி என்று கடிகாரம் நேரம் காட்டியபோது, என் அருகில் யாரோ வரும் உணர்வு ஏற்பட்டு நிமிர்ந்தேன். மேனேஜர் முத்துவேல். கூடவே ஓர் இளைஞன்.

"இது மிஸஸ் உஷாமதி சுதர்ஷன்" என்று என்னை அறிமுகப்படுத்தினார் முத்துவேல்.

"மதி. இவர் புதிதாக சேர்ந்திருக்கும் திவாகர். மார்க்கெட்டிங் எக்ஸிக்யூட்டிவ்."

நான் அவனைப் பார்த்தேன். எழுந்தேன். கை கூப்பினேன். "ஹலோ" என்றேன்.

அவன் "ஹலோ" என்று சொல்லிச் சிரித்தான். ஆரோக்கியமான ஈறு, வரிசையான பற்கள். இளநீலத்தில் சட்டை, கருநீலத்தில் பேன்ட். அவன் கண்கள் கிராமத்துக் காளையின் கண்கள் போல கருப்பு விளிம்பிற்குள் அடங்கிய வெண்படலமாகத் தெரிந்தன. அவன் கண்களின் பாப்பாக்கள் என்னைக் கூர்ந்து பார்த்தன.

அவன் பார்வை என் கழுத்துத் தாலியில் ஒருகணம் தயங்கியது. பின் அதைத் தவிர்த்து என் முழு உடலையும் ஒருமுறை வருடி மீண்டது.

"நான் புதியவன். நீங்கள் எல்லாம்தான் எனக்கு எல்லாம் கற்றுக்கொடுக்க வேண்டும்."

"நிச்சயமாய்" என்றேன்.

நகர்ந்தான். அவனுடன் ஆண்மையை அறிவிக்கும் நறுமணமும் நகர்ந்தது.

நான் உட்கார்ந்தேன். என் இதயத்தில் என்னை அறியாமலேயே

துடிப்பு அதிகரித்திருந்தது. அவனுடைய முதல் பார்வையிலேயே எனக்கு ஒரு செய்தி இருந்தது.

'உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது.'

எனக்கும் அவனைப் பிடித்திருந்தது. சில பேரைப் பார்த்தவுடன் நட்புகொள்ளத் தோன்றும். திவாகர் அப்படித்தான் இருந்தான். முதல் பார்வையிலேயே என்னை வசீகரித்துவிட்டான்.

நான்... நான்.. நான்...

அவனை விரும்பத் தொடங்கி இருந்தேன்.

## 2

முதல் பார்வையிலேயே எனக்கு அவளைப் பிடித்துப் போயிற்று.

உஷாமதி. வித்தியாசமான பெயர். வித்தியாசமான அழகி. அவள் உட்கார்ந்திருந்த விதம், எழுந்து எனக்கு 'ஹலோ' சொன்ன விதம், எல்லாமே... எல்லாமே எனக்குப் பிடித்துப் போயிற்று.

வாழ்க்கையில் இந்த மாதிரியான ஒரு தருணத்திற்காகத்தான் காத்திருந்தேன். ஒரு மல்லிகைப்பூ தேவதையின் அருளுக்கு ஆளாக வேண்டும் என்றுதான் காத்திருந்தேன். இதோ என் மல்லிகைப்பூ தேவதை.

நான், என் காபினுக்குள் நுழையுமுன் அவளைப் பற்றி நிறையவே நினைத்துவிட்டேன். 'ச்சே... நான் ஒரு முட்டாள். துர்பாக்கியவான். ஆபீஸ் மேனேஜர் அவளை என்ன சொல்லி அறிமுகப்படுத்தினார்! திருமதி உஷாமதி சுதர்சன். கல்யாணமானவள். அவளைப் போய் இப்படியெல்லாம் நினைப்பதாவது? நான் கற்றறிந்த நாகரீகம் எங்கே?

படித்த பாடங்கள் அடுத்தவன் மனைவியையா பார்க்கச் சொல்லித் தந்தது?



வெட்கம்... வெட்கம்!

நான் தலையை ஒருமுறை கலைத்து விட்டுக்கொண்டேன். என் மீது எனக்குக் கோபம் வரும் சந்தர்ப்பங்களில் நான் இப்படித்தான் செய்துகொள்வேன்.

அறையில் நுழைந்ததும் மணியடித்து பியூனை வரவழைத்து ஒரு சிகரெட்டை வாங்கி வரச் சொல்லிப் புகைத்தேன். என் வாழ்நாளில் ஆறு நிமிடங்களைக் குறைத்துக்கொண்டேன். ஒரு சிகரெட் பிடித்தால் மனிதனின் ஆயுளில் ஆறு நிமிடங்கள் 'அவுட்' என்று என்றைக்கோ படித்திருந்த துணுக்கு என் மனதில் ஈர வர்ணத்தில் விரல் ரேகையாக ஒட்டிக்கொண்டிருந்தது.

எனக்கு நானே கொடுத்துக்கொண்ட தண்டனை. உட்காரு. முட்டாளே உட்காரு. அவளை நினைக்காதே. மற. நான் சேர்ந்திருப்பது புது கம்பெனி. புகழ்பெற்றது. இங்கே இந்த மாதிரி 'செக்ஸ்' பிரச்சினையில் எல்லாம் மாட்டிக்கொண்டால் ஊரில் உன்னை உத்தமனாக நினைத்திருக்கும் உன் அம்மா உன்னைப் பற்றி என்ன நினைத்துக்கொள்வாள் என்று எனக்குள் ஒரு கேள்வி எழுப்பிக்கொண்டேன். என் கன்னத்தில் ஒரு முறை பளார் என்று அறைந்துகொண்டேன்.

கதவு என் அனுமதியின்றி திறந்தது. 'யார்?' என்று கோபப்படுவதற்கு முன், மேனேஜரின் முகம் தெரிந்தது. நல்ல வேளை... கோபப்படவில்லை.

"என்ன... எப்படி இருக்கிறது புது ஆபீஸ்?" என்று கேட்டார். "சிகரெட் வாடை வருகிறது. நீங்கள் சிகரெட் குடிப்பீர்களா?"

"நோ! நோ" என்று அவசரமாக மறுத்தேன்.

"பதற்றப்பட வேண்டாம் திவாகர். ஆபீஸ்ல சிகரெட் குடிக்கக் கூடாது என்று சட்டம் இல்லை. நீங்கள் சிகரெட் குடிப்பவர் என்றால் உங்களிடம் இருந்து ஒரு சிகரெட் ஓசியில் வாங்கி அடிக்கலாம் என்று கேட்டால் இவ்வளவு பதற்றப்படுகிறீர்களே?"

ச்சே. அவ்வளவுதானா?

"பாய். ஓ பாய்."

என் திடீர் உற்சாகம் மேனேஜருக்கு வியப்பாக இருந்தது. என் உற்சாகக் குரல் கேட்டு உள்ளே நுழைந்த பியூன் ராமசாமிக்கும் (ராமசாமியோ, முனுசாமியோ, கோவிந்தசாமியோ, பியூன்கள் எல்லாம் அப்படித்தானே பெயர் வைத்துக்கொள்வார்கள்) ஆச்சரியம். அவன் அமைதியான ஆபீசில் இந்த மாதிரியான உற்சாகக் குரலை இதுவரை கேட்டதே இல்லை போல என்னைப் பார்த்தான்.

"வாட்ஸ் யுவர் நேம்?" என்றேன், அமெரிக்க ஆங்கிலத்தில்.

"சார்?" என்று திகைத்தான்.

"தேரா நாம் க்யகா ஹை பாய்?" என்றேன், கான்பூர் இந்தியில்.

"சார்?" மேலும் திகைத்தான்.

"உன் பெயர் என்ன சகோதரா?"

"இதை முன்னாலேயே கேட்டிருக்கலாமே சார்?"

"இப்போது கேட்டால் சொல்லமாட்டாயா, ராமசாமி, முனுசாமி, கோவிந்தசாமி?"

"என் பெயர் விக்ரம் சார்."

கிளீன் போல்டு. விக்ரமின் சேப்பாக்க முனைப்பந்து, சரியான அளவில் மிக வேகமாக, காற்றைக் கிழித்து வந்து ஆட்டக்காரருக்குப் பத்தடி முன்பாக நிலத்தில் குத்தி, உயர்ந்து, ஆட்டக்காரர் திவாகரை ஏமாற்றி, அவர் கால் இடுக்கில் நுழைந்து, மூன்று ஸ்டம்புகளையும் ஒரே தாக்கு தாக்கி வீழ்த்தியது. அவுட். திவாகர் அவுட். ஆட்டத்தைத் தொடங்கிய முதல் பந்திலேயே திவாகர் அவுட்.

"இந்தப் பந்து பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள். ஆபீஸ் மேனேஜர் முத்துவேல் அவர்களே."



நான் என் முகத்தை கைக்குட்டையால் துடைத்து விட்டுக்கொண்டேன்.

"விக்ரம், போய் சாருக்கு ஒரு சிகரெட் வாங்கி வா" என்றேன்.

"அப்படியே சார் செலவில் இரண்டு டீ சொல்லு விக்ரம்" என்றார் முத்துவேல். சொல்லிவிட்டு என்னைப் பார்த்து சிரித்தார்.

எனக்கு வேறு வழியில்லை. இந்த ஆபீசில் யார் எப்படி என்று தெரிந்துகொள்ள எப்படியும் ஒரு மாதமாவது ஆகும். அதுவரை நான் அடக்கித்தான் வாசிக்க வேண்டும்.

"புது ஆபீஸ் எப்படி இருக்கிறது என்று கேட்டேன்."

"ஓ. யெஸ்."

"அப்படியென்றால் பிடித்திருக்கிறது என்று அர்த்தமா, இல்லை என்ற அர்த்தமா?"

"பிடித்திருக்கிறது."

"இதோ பார் திவாகர். நமக்குள் பாசாங்குகள் எல்லாம் வேண்டாம். நீங்கள், நாங்கள் என்று மரியாதைச் சொல் எல்லாம் உபயோகித்து நாம் அன்னியர்களாகவே இருந்துவிட்டுப் போக வேண்டாம். நாம நண்பர்கள். நான் உன்னை நீ, நான் என்றுதான் கூப்பிடுவேன். நீ என்னை அப்படியே கூப்பிடு. என்ன, எனக்குக் கொஞ்சம் வயசு அதிகம். தலை நரைக்கத் தொடங்கி ஐந்து வருஷம் ஆகிவிட்டது. அதனால் என்ன... பரவாயில்லை. 'ஓப்ப'னாக இரு. 'ஓப்ப'னாகப் பேசு. ஆனால், ஒரு விஷயம். நான் ஒரு ஓசி கிராக்கி. என்னிடம் இருந்து ஏதாவது பதில் வேண்டும் என்றால் எனக்கு ஒரு டீயோ, காப்பியோ, சிகரெட்டோ, கூல் டிரிங்க்கோ, டிபனோ தட்சணை வைத்தால்தான் வாய் திறப்பேன். என்னிடம் ஆபீசில் யாரும் அவ்வளவு சகஜமாய்ப் பேசி இருக்கமாட்டார்களே. நீ கூட கவனித்து இருப்பாயே? காரணம் இதுதான். எங்கே நான் ஏதாவது ஓசி கேட்டுவிடுவேனோ என்று இந்த ஆபீஸ் கஞ்சப் பயல்களுக்குப்

பயம். ஓ.கே.! ஓ.கே.! அறிமுகம் ஆகிவிட்டது. இனிமேல் திறந்த மனதுடன் இருப்போம். ஆபீஸ் பிடித்திருக்கிறதா?”

“பிடித்திருக்கிறது வேல்” என்றேன்.

“முத்துவேலை, வேலாக்கிவிட்டாயா? அதுவும் சரிதான். என்னை யாரும் இதுவரை அப்படி அழைத்ததில்லை. வித்தியாசமாக இருக்கிறது. இள ரத்தம் என்றாலே ஏதாவது இந்த மாதிரி புதிது புதிதாகத்தான் குட்டிக் கரணம் போடுவார்கள் போலிருக்கிறது.”

“மேக் எ பார்டன்”

“பார்டனாவது, வெங்காயமாவது. உன் கான்வென்ட் இங்கிலீசை எல்லாம் உஷாமதியிடம் வைத்துக்கொள். அந்த மாதிரி கம்பெனியுடன் இருக்கும்போதுதான் நாசூக்கு பார்க்க வேண்டும். ஸ்பூனால் சாப்பிட வேண்டும். நுனி நாக்கு இங்கிலீசில் பேச வேண்டும். நமக்கு அதெல்லாம் ஒத்து வராது என்றுதான் உஷா மேசைக்குப் பக்கத்திலேயே நான் போவது இல்லை. ஆபீசில் இன்னும் ஐந்தாறு குட்டி இருக்கிறது. விமலா. கமலா, நீலா, ஷீலா, தோலா என்று எல்லாம் ஜக ஜகா என்று ‘டிரஸ்’ பண்ணிக்கொள்ளும். எல்லாம் பெரிசாகத்தான் இருக்கும்.

ஆனால், உடம்பில் இருக்கிற அளவுக்குத் தலையில் ஒன்றுமில்லை. அந்த ‘செட்’தான் நமக்கு லாயக்கு. காபினுக்கு ‘டிக்டேட்’ பண்ணக் கூப்பிட்டு நிற்கச் சொன்னால் நிற்பார்கள். உட்காரச் சொன்னால் உட்காருவார்கள். ஸ்ட்ரெய்ட் போஸ், சைடு போஸ் எல்லாம் பார்க்கலாம். பார்ப்பேன். முத்தம் கொடுக்கச் சொன்னால் கொடுப்பார்களா என்று தெரியவில்லை. ஒரு தடவை கேட்டுப் பார்க்க வேண்டும்.”

“சார், கடைவாய்ப் பல்லில் இரண்டு பல் ஆடுவதாகச் சொல்லிக் கொண்டிருந்தீர்களே... டாக்டருக்கு ‘பீஸ்’ எதுவும் கொடுக்காமலேயே ஒரு நாள் நீங்கள் அந்த இரண்டு பற்களையும் கழற்றிக்கொண்டு விடப் போகிறீர்கள்” என்றான், உள்ளே நுழைந்த



விக்ரம்.

டீயை கோப்பையில் ஊற்றி, பிளாஸ்டிக் தட்டுகளின் மேல் வைத்தான். சிகரெட்டை முத்துவேலிடம் கொடுத்து, பாக்கெட்டில் இருந்து ஒரு மெழுகுத் தீப்பெட்டி எடுத்து குச்சி பற்ற வைத்தான்.

“சார், இவரிடம் நிறைய பேச்சு கொடுக்காதீர்கள். அப்புறம் உங்கள் சம்பளத்திலேயே இவர் குடும்பத்தையும் நடத்திவிடப் பார்ப்பார்” என்று சொல்லிவிட்டு– முத்துவேல் கையுயர்த்தி வீச, அந்த வீச்சில் இருந்து குனிந்து தப்பித்து அறையைவிட்டு வெளியேறினான்.

முத்துவேல் டீயை உறிஞ்சினான். அவன் இவ்வளவு நட்பாக நெருங்கிய பிறகு, முத்துவேலை அவர்... இவர் என்று குறிப்பிட்டுப் பேச எனக்கு ஒரு மாதிரி இருந்தது.

“தமாஷெல்லாம் ஒரு பக்கம் திவாகர். ஒரு சின்ன புத்திமதி சொல்றேன்.”

“சொல்” என்றேன்.

“உஷாமதியிடம் எப்போதாவது பேச நேரம் கிடைத்தால் அவளுடன் எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசு. ஆனால், அவள் கணவனைப் பற்றி மட்டும் பேசிவிடாதே.”

“ஏன் வேல்? அவள் கணவன் என்ன அவ்வளவு கொடுமைக்காரனா?”

“இல்லை. அவளுக்கு கணவனே இல்லை.”

“என்னது?” என்று அதிர்ந்தேன்.

“அவன் டெல்லியில் ஒரு சாலை விபத்தில் செத்துப் போய்விட்டான்.”

எனக்குத் தொண்டையில் என்னவோ அடைத்தது போல் இருந்தது.

“நிஜமாகவா?” என்றேன், நாக்கு உலர.

"ஆம். அதைப் பற்றி அவள் ஒரே ஒரு முறை என்னிட சொல்லி இருக்கிறாள். டெல்லியில் கஸ்தூரிபா காந்தி மார்க் அவள் கணவன் ஸ்கூட்டரை ஓட்டிச் சென்றபோது, குளிரிலிரு தன்னைக் காத்துக்கொள்ள அணிந்திருந்த ஜெர்கின், ஜிப் வில காற்றில் விரிந்து– அதன் முனை ஒரு டிரெய்லர் லாரியி பக்கவாட்டு 'ஹுக்'கில் மாட்டி, அப்படியே இழுக்கப்பட் அதன் ராட்சத சக்கரத்தில் கீழே சிக்கி, சக்கரம் உருண்டபோ அவன் தரையோடு தரையாகத் தேய்க்கப்பட்டு இருந்ததைப் பற் நடுங்கிக்கொண்டே சொல்லி மயங்கி இருக்கிறாள்."

"ஓ... நோ" என்றேன். திடீரென்று என் தலையில் யாரோ அமிலத்தைக் கரைத்து ஊற்றிய மாதிரி, திடீரென்று யாரோ என்னை உப்பு நீரில் மூழ்கடித்த மாதிரி. திடீரென்று யாரோ கொழுந்து விட்டெரியும் நெருப்பில் தள்ளிய மாதிரி.

"ஐ ம் ஸாரி. உன் மூடை 'அவுட்'டாக்கி விட்டேனோ?"

"சேச்சே" என்றேன், செயற்கையாக. இருந்தும் அந்த அ இன்னும் என் தலை மீதுதான் இருந்தது. அவ்வளவு அழகானவள் நேர்த்தியானவள். நறுமணமானவள். ஒரு தேவதை போன்றவள் அவள் பின்னணி இவ்வளவு இருட்டாகவா இருக்க வேண்டும் பின் அந்தப் பொட்டு, தாலி எல்லாம்?

கணவனை இழந்தவர்கள் பொட்டு வைக்கக்கூடாது, ஒ பொற்கொடி அணியக் கூடாது என்று யாராவது எழுதி வைத்திருக்கிறார்களா என்ன? உஷாமதி விதவையா? நிஜமாகவா இவ்வளவு அற்புதமான பெண் விதவையாகக் கூட இருக்க முடியுமா?

"ஸாரி. நான் உன்னை சோகப்பட வைத்துவிட்டேன் என் தெரிகிறது. நீ வேலையில் கவனம் செலுத்தப் பார். நான் உன்னை அப்புறம் வந்து பார்க்கிறேன்" என்று முத்துவேல் உடனடியா என் அறையைக் காலி செய்தான்.

நான் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தேன். அன்



மாலை வரை எனக்கு வேலை ஓடவில்லை. அந்த ஆபீசில் நுழைந்ததும், நான் புரட்சியாளனாக மாறி– சேல்ஸ் கிராபின் அம்பு எப்போதும் மேல் நோக்கியே பயணம் செய்கிற நிலைக்குக் கொண்டுவரப் போகிறேன் என்று நேற்று சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டது எல்லாம் காற்றோடு போய்விட்டது. பேயடித்த மாதிரி உட்கார்ந்திருந்தேன். யாருக்கும் எந்தக் கடிதமும் எழுதாமல் செயலற்றுப் போயிருந்தேன். கதவைத் திறந்து வெளியே போக எனக்குத் தைரியம் வரவில்லை. உஷாமதி கண்ணில் படுவாள். அவள் முகம் பார்க்க எனக்குத் தைரியம் போதவில்லை. சாப்பிடவில்லை. தொண்டையில் ஒரு முள் சிக்கியிருந்த மாதிரி உணர்ந்தேன். மூச்சுத் திணறுவது போல் இருந்தது.

மாலை வரை, ஒரு மாதிரி பொழுதைக் கொன்றேன். எப்போது ஐந்து மணி ஆகும் என்று காத்திருந்துவிட்டு, விநாடி முள் பன்னிரண்டைத் தொட்டு, நிமிட முள் பன்னிரண்டை நெருங்கி மூச்சிரைத்து, மணி முள் ஐந்தை முத்தமிட்டபோது நான் என் இருக்கையில் இருந்து எழுந்துகொண்டேன். அறையின் மரக்கதவில் பதிந்திருந்த கண்ணாடிச் சதுரத்தின் வழியே மெல்ல பார்வையைச் செலுத்தினேன்.

அறை காலி. டைப்ரைட்டர்கள் 'ரெக்ஸின்' மூடிகளுடன் இருந்தன. உஷாமதி அவள் இருக்கையில் இல்லை. ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் நான் கதவைத் திறந்து வெளியே வந்தேன்.

ஆபீஸ் ஐந்தாவது மாடி. நாலரை வரைக்கும்தான் வேலை நேரம். பஸ்சில் கூட்டத்தைத் தவிர்ப்பதற்காக ஒன்பதரையில் இருந்து நாலரை வரை என்று ஆபீஸ் நேரம் அமைக்கப்பட்டிருந்தது. நான் மற்ற யாரைச் சந்திக்கிறேனோ இல்லையோ, உஷாமதியை மட்டும் சந்திக்கக் கூடாது என்பதற்காகவே அறையில் ஓர் அரை மணிப் பொழுதை அதிகமாகச் செலவழித்தேன்.

வராந்தாவில் ஷூ ஒலிக்க நடந்தேன். கோடியில் லிப்ட் அறை இருந்தது. தானியங்கி 'லிப்ட்'. நான் அதை அடைந்து, பட்டன் அழுத்திக் காத்திருந்தேன். லிப்ட் 5–ம் மாடிக்கு வந்து 'ப்ஹா'

என்று திறந்து அதன் 'ஸ்லைடிங்' கதவுகள் சக்கரத்தில் சத்தமிட்டு உருண்டு நின்றது. நான் நுழைந்தேன். நான் மட்டும் லிப்டில். அங்கிருந்த வாசனை மெலிதாக என் மூக்கை வருடிக் கொடுத்தது. நான் தரைத் தள பட்டனை அழுத்தினேன். எலக்ட்ரானிக் சாதனம் என் ஆணையை ஏற்று - ஒரு சிறு தயக்கம் காட்டி மூடிக்கொள்ளத் தொடங்கிய நேரத்தில் லிப்டின் பக்கவாட்டில் காலடிச் சத்தம் பரபரப்பாகக் கேட்டது. 'லிப்ட்' கதவைத் திறக்கும் பட்டனை நான் மறுபடி அழுத்தினேன். மூடிக்கொண்டிருந்த கதவு மறுபடி திறந்தது.

உஷாமதி உள்ளே நுழைந்தாள்.

"ஹலோ, புறப்பட்டுவிட்டீர்களா?" என்று என்னைக் கேட்டுக்கொண்டே வெகு இயல்பாக தரைத் தளத்துக்கான பட்டனைத் தட்டினாள்.

யாரைப் பார்க்கக்கூடாது என்று நான் தாமதமாகக் கிளம்பினேனோ... அவள் எதிரிலேயே கையும் களவுமாகப் பிடிபட்ட மாதிரி இருந்தேன்.

"ஆமாம்... யெஸ்... யெஸ்..." என்று தடுமாறினேன்.

அவள் புன்னகைத்தாள். பதிலுக்குப் புன்னகைக்கத் தோன்றவில்லை. மூளையை முழுக்க, முழுக்கப் பரிதாபம் அடைத்திருந்தது. 'லிப்ட்' கதவு மூடிக்கொண்டது. லேசான குலுக்கலுடன் கீழே இறங்கத் தொடங்கியது. வயிற்றின் அமிலக் கரைசல் ஒரு துள்ளு துள்ளி அடங்கியது.

ஒரு தர்ம சங்கடமான நேரம். 'லிப்ட்' கீழே இறங்க முப்பது விநாடிகளாவது ஆகும் போலிருந்தது. இந்த முப்பது விநாடிகளில் மவுனமாய் லிப்டின் சீலிங்கைப் பார்ப்பது எவ்வளவு நாகரீகமற்ற செயலாக இருக்கும் என்று நான் நினைத்துக்கொண்டேன்.

"என்ன இவ்வளவு தாமதம்?"

"இன்றைக்கு வேலை கொஞ்சம் அதிகம். மாத 'ஸ்டேட்மெண்ட்' அனுப்ப வேண்டிய நாள். அதனால்தான் கொஞ்சம்



தாமதமாகிவிட்டது" என்றாள்.

காலையில் இருந்து மாலை வரை வேலை செய்த களைப்பே முகத்தில் தெரியாத மாதிரி 'பளிச்' என்று இருந்தாள். முகம் கழுவி இருப்பாள் போலும். மிக லேசாக 'பவுடர்' தீற்றி இருந்தாள். வேறு ஒரு டிசைனில் பொட்டு ஒற்றி இருந்தாள். அவளது உதடுகள் சின்னதாக, செழிப்பாக, கவர்ச்சியாக இருந்தன. பேசுகையில் அவள் உதடுகள் அசைந்தபோது அவை அசைந்த மாதிரி தோன்றவில்லை. துடித்த மாதிரித் தோன்றின. என்ன இது? 'லிப்ட்' ஏன் இன்னும் கீழே போய்ச் சேரவில்லை?

நான் இண்டிகேட்டரைப் பார்த்தேன். இண்டிகேட்டர் 3 என்று காண்பித்தது. இன்னும் மூன்றைத் தாண்டவில்லையா? என்று நான் நினைத்துக்கொண்டு இருந்தபோதே, லிப்டின் இண்டிகேட்டர் அணைந்தது.

ஒரு குலுக்கலுடன் 'லிப்ட்' நின்றது. உள்ளே இருந்த குழல் விளக்கு அணைந்தது. மின்விசிறி ரீங்காரம் ஓய்ந்தது. மின் துண்டிப்பா? பூகம்பமா? 'லிப்ட்'டில் கோளாறா? இல்லை, மெயின் சுவிட்சை அணைத்துவிட்டு எல்லோரும் கட்டடத்தை விட்டு வெளியே போய்விட்டார்களா? ஏன், ஏன்?

"மிஸஸ் உஷாமதி" என்றேன்.

"ம்" என்றாள். குரலில் ஒரு திடீர் பயம் தெரிந்தது. வாயைத் திறக்கவே பயப்படுகிறாள் போலும்.

"பவர் கட் போல் இருக்கிறது. அனாவசியமாகப் பயப்பட வேண்டாம்" என்றேன்.

அதற்குப் பதில் இல்லை. மூச்சிரைப்பு கேட்டது. மல்லிகை வாசம், மூச்சிரைப்பு. அவளது அண்மை. ஆதாரமற்ற வாடிய பூங்கொடி என்று நான் என்னன்னவோ அபத்தமாக நினைத்துக் கொண்டிருந்த வேளையில் அவள் "ஐ'ம் ஸாரி, ஐம் ஸாரி" என்று முணுமுணுப்பது கேட்டது.

'எதற்கு மன்னிப்பு?' என்று நான் கேட்க வாய் திறப்பதற்குள்,





அவள் உடல் என் மேல் படர்ந்தது.

"உஷாமதி... உஷாமதி" என்றேன்.

குரல் கத்தலாகத்தான் வெளிப்பட்டது. அவள் உடல் என் மேல் படர்ந்தபோது பரவசமாக இருந்தாலும், உடனே திகில் என்னை ஆக்கிரமித்தது இல்லை. சாதாரணமாக எதுவும் நிகழவில்லை. என்னவோ அசாதாரணமாக நடந்திருக்கிறது.

அவள் என் மேல் படர்ந்து சரிந்தாள். விட்டால் லிப்டின் சுவரில் இடித்துக்கொண்டு கீழே விழுந்துவிடுவாள். இருட்டு. அவளை எங்கே பற்ற வேண்டும் என்று புரியவில்லை. படக்கூடாத இடத்தில் கை பட்டுவிட்டால் என்ன நினைத்துக்கொள்வாள்?

அவள் தோள் போல் உணர்ந்த இடத்தைப் பற்றி என் மேல் சாய்த்துக்கொண்டேன். அவள் முதுகு என் மார்பை அழுத்தியது. என் திகில் ஏறிக்கொண்டே போனது.

"உஷாமதி... உஷாமதி"

குரலில் பதற்றம், கடைசி விநாடியில் தொற்றிக்கொண்டிருந்தது.

பதிலில்லை. என்ன செய்யப்போகிறேன்? ஒரு கையால் அவளைத் தாங்கி, இன்னொரு கையால் லிப்டின் கதவை மோதினேன்.

"உதவி. உதவி பிளீஸ்."

என் குரல் வெளியே இருந்த யாருக்கும் கேட்டதா என்று தெரியவில்லை. என்னவோ வெகு மெல்லியதாகப் பதில் குரல் வருவது போல் இருந்தது. ஆபீஸ்களில் இந்த மாதிரி முழுதும் கதவு அடைத்துக் கொள்ளும்படியான லிப்ட்களை உபயோகிக்கக் கூடாது. 'கிரில் கேட்' கதவுகளைத்தான் உபயோகிக்க வேண்டும். லிப்டை விட்டு வெளியேறியதும் முதல் வேலையாக கிரில் கதவு மாற்றச் சொல்லி சொல்ல வேண்டும்.

லிப்டை விட்டு வெளியேறியதும் இந்த விநாடியில் அதன்

சாத்தியம்கூட எனக்குத் தோன்றவில்லை. நான் மறுபடி கையை ஓங்கி கதவை அறைய முயன்றபோது, கிர்ர் என்று மின்விசிறி சுழலத் தொடங்கும் சத்தம் கேட்டது. மின்னி மினுக்கி 'டியூப் லைட்' எரியத் தொடங்கியது. இன்டிகேட்டர் விளக்கு மூன்றை காண்பித்தது.

அப்பாடா... லிப்டில் மின்சாரம் வந்துவிட்டது. அது கீழே இறங்கத் தொடங்கியது.

மூன்று... இரண்டு... ஒன்று...

லிப்டின் கதவு திறந்தது. வெளியே எங்களுக்காக ஆயிரம் பேர் காத்திருக்கப் போகிறார்கள் என்று நினைத்திருந்தேன். யாரும் இல்லை. வெளிச்சத்தில் அவள் முகம் பார்த்தேன். தாமரை இதழ்கள் போல இமைகள் மூடி இருந்தன. உதட்டில் 'மைக்ரோ' அளவில் வியர்வைத் துளிகள். காற்று பட்டதும் அவள் உடல் நடுங்கத் தொடங்கியது.

நான் அவளைத் தாங்கிய மாதிரி லிப்டிற்கு வெளியே அழைத்து வந்தேன். மாடிப் படிகளின் வழியாக யாரோ இறங்கி வரும் சத்தம் கேட்டது. திரும்பினேன். வாட்ச்மேன்.

"என்ன சார்?" என்று ஓடி வந்தான்.

"மயக்கம் போட்டு விழுந்துவிட்டார்கள். உடம்பு நடுங்குகிறது. டாக்டரிடம் போக வேண்டும். சீக்கிரம்" என்றேன்.

"பவர் கட் ஆச்சி சார். நான் ஜெனரேட்டரை ஆன் பண்ணினேன். ஒரு நிமிஷந்தான் ஆயிருக்கும். அதற்குள்ளாகவா மயக்கம் போட்டு விழுந்துவிட்டார்கள். உஷாமதிம்மா தங்கமான பொண்ணாயிற்றே?" என்று அவன் தாமதத்திற்கு ஒரு காரணமும், அவள் குணத்திற்கு ஒரு சான்றும் கொடுத்துவிட்டு வெளியே ஓடினான்.

டாக்டர் கொஞ்சம் வயதானவர். வெள்ளை மீசை. உஷாமதியை நோயாளிப் படுக்கையில் படுக்க வைக்கச் சொன்னார். படுக்க வைத்தேன். நாடி பிடித்துப் பார்த்தார். 'ஸ்டெத்' ஒற்றிப்



பார்த்தார்.

"பயப்பட ஒன்றுமே இல்லை. பைலேரியல் காய்ச்சலாகத்தான் இருக்கும். அதனால்தான் இப்படி ஆகி இருக்கிறது. ஷீ வில் பீ ஆல் ரைட். லுக்ஸ் பியூட்டிபுல். இஸ் ஷீ யுவர் ஒய்ப் யெங் மேன்?"

"இல்லை சார். என் ஆபீஸ் கொலீக்"

"ஐ'ம் ஸாரி."

"பரவாயில்லை" என்றேன்.

டாக்டர் டெம்பரேச்சரை இறக்க ஒரு ஊசி போட்டார் மருந்து எழுதிக் கொடுத்தார். நியாயமான கட்டணம் வாங்கிக்கொண்டார்.

உஷாமதி மெல்ல அசைந்தாள். கண்களை விழித்தாள். சுற்றிலும் மிரண்டு போய் பார்த்தாள். சடக்கென்று எழ முயற்சித்தாள்.

"பார்த்து" என்றேன். அவளைத் தாங்க முயன்றேன்.

அவளே மறுபடி படுக்கையில் படுத்துக்கொண்டாள்.

"என்ன ஆயிற்று?" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

"யூ ஜஸ்ட் பெயின்டட்" என்றேன்.

"லிப்டிலா?"

"ஆம்"

"ஐ'ம் ஸாரி. உங்களுக்கு நிறைய தொந்தரவு கொடுத்துவிட்டேன்."

"பரவாயில்லை. உங்களை உங்கள் வீட்டில் 'டிராப்' பண்ணி விடுகிறேன். வாருங்கள்."

அவள் என்னை ஒரு முறை அகன்ற விழிகளால் பார்த்தாள். எழுந்துகொள்ள வசதியாகத் தன் கையை நீட்டினாள்.

நான் பற்றினேன். எனக்கு கண்களில் நீர் சுரந்தது. என்னை நம்பி ஒரு பெண் தன் கரத்தை நீட்டுகிறாள்– பாதுகாப்பிற்காக.

தந்தையிடம் பெண் நீட்டுவது போல. சகோதரனிடம் தங்கை நீட்டுவது போல.

அவள் அப்படி எண்ணித்தானே கையை நீட்டுகிறாள். என் கை அவள் கையைப் பற்றியபோது மனதில் கயமை மூண்டது. ஸ்பரிசத்தில் சுகம் கண்டது. மனம் என் கட்டுப்பாட்டை மீறி 'லாலல்லா' என்று இசைக்கத் தொடங்கியது. என் மேல் எனக்கே ஏற்பட்ட வெறுப்பில், கண்களில் நீர் சுரந்தது. நான் அவளை மெல்ல அழைத்துச் சென்று டாக்சியின் பின் இருக்கையில் ஏற்றினேன். முன் கதவு திறந்து அமர்ந்தேன்.

"நான் போகவா?" என்றான் வாட்ச்மேன்.

நல்லவன். தக்க நேரத்தில் உதவியவன்.

"போப்பா" என்றேன். ஒரு பிற்சேர்க்கையாக "தாங்க்ஸ்" என்றேன்.

## 3

**நா**ராயணி பதறிப் போனாள். நான் ஒரே நாளில் முந்நூறு வருடங்களை வாழ்ந்துவிட்டவள் போல் தோன்றுவதாகக் கூறினாள். திவாகருக்கு நன்றி சொன்னாள்.

திவாகருக்கு நாராயணியின் 'ஸ்பெஷாலிட்டி'யான காப்பியைக் கொடுத்தாள். திவாகர் காப்பியை ரசித்துக் குடித்தான். வீட்டில் சுதாமதி இருப்பதே அவனுக்கு வீட்டுக்கு வந்த பின்புதானே தெரியும்.

"உங்களுக்கு இவ்வளவு அழகான குழந்தை ஒன்று இருப்பது தெரியாது" என்று குற்ற உணர்ச்சியுடன் சொன்னான்.

"தெரிந்திருந்தால்?" என்று நான் கேட்டேன். அவன் எதற்காக அப்படிச் சொன்னான் என்பதைப் புரிந்துகொள்ளும்



படபடப்பான ஆவலுடன்.

நான் இப்போது கொஞ்சம் பெட்டராக பீல் பண்ணினேன். டைனிங் டேபிள் நாற்காலியில் உட்கார்ந்து நாராயணி போட்டுக் குடுத்த பானத்தைக் குடித்துக்கொண்டே கேட்டேன். என் உடல் மறுபடி சகஜ நிலைமைக்கு திரும்பிக்கொண்டிருந்தது.

"ஒரு பிஸ்கட் பாக்கெட்டாவது வாங்கி வந்திருப்பேன்" என்றான்.

இவ்வளவுதானா? எனக்கு ஏமாற்றமாகவும் இருந்தது. திருப்தியாகவும் தெரிந்தது. திவாகர் கண்ணியமானவன். கண்ணிய எல்லை மீறி ஒரு வார்த்தை பேசத் துணியாதவன். அவனுக்காக, 'பரவாயில்லை. அதனால் என்ன? எதற்கு இந்த 'பார்மாலிட்டி' எல்லாம்?' என்பது போன்ற வாக்கியங்களை என் மூளை கம்ப்யூட்டரில் தேடிக் கொண்டிருக்கும்போது, சுதாமதி தேங்காய் உடைப்பது போல் சட்டென்று பேசிவிட்டாள்.

"அதனால என்ன அங்கிள்? இப்போதான் நான் இருக்கறது தெரிஞ்சிடுச்சே. இப்ப வாங்கிட்டு வந்து குடுத்தா நான் என்ன வேணாம்னா சொல்லிடுவேன்?"

ஐயோ, இதற்கு வாய் இருக்கிறதே!

"சுதா" என்று அதட்டினேன்.

"பிளீஸ். குழந்தையைத் திட்டாதீங்க. இவ்வளவு அறிவுடன் ஒரு குழந்தை கிடைப்பது ஒரு வரம்" என்றான் திவாகர்.

சுதாமதியை பிரமிப்புடன் பார்த்தான்.

"ஒனக்கு பிஸ்கட் வாங்கித் தரலாமா?

"ம், என்னையும் கூட்டிட்டுப் போய் வாங்கித் தரலாம்."

"குட் குட், என்ன பிஸ்கட் வேணும்?"

"முந்திரி"

"வெரிகுட். வா போகலாம்."

உடனே அவள் எழுந்து அவன் தோளில் தொற்றிக்கொண்டா
என் மறுப்பு, கடலோரம் நின்று கத்திய மாதிரி காணா
போயிற்று. எனக்கே மறுக்க வேண்டும் என்று திடமாகக் கூ
தோன்றவில்லை.

திவாகர் சுதாமதியைக் கூட்டிக்கொண்டு போய் திரும்
வரும்போது– பிஸ்கட் பாக்கெட், பொம்மை, 'ஐ லவ் மம்மி' என்
பிரிண்ட் செய்யப்பட்ட ஒரு ப்ராக் என்று ஒரு மூட்டையுட
திரும்பினான்.

எனக்கு சுதர்வின் மேல் கோபம் கோபமாய் வந்த
இவள்தான் 'இது வேண்டும், அது வேண்டும்' என்று கேட்
அவனை நச்சரித்திருப்பாள்.

என் முகத்தின் கோபக் குறிப்பை சுதாம
புரிந்துகொண்டாள்.

"நான் எதுவுமே கேக்கலைம்மா. எல்லாம் இந்த அங்கிள்தா
மம்மி ஒண்ணும் சொல்லமாட்டாங்க. திட்டுனா நா
திட்டையெல்லாம் வாங்கிக்கறேன். ஒன்னை திட்டினா நீ வாப
டு அங்கிள்னு சொல்லிடு. எல்லாத் திட்டும் அங்கிளுக்கே வந்
சேர்ந்துடும்னு சொல்லி..." சுதாமதி அழத் தொடங்கினாள்.

"ஐயையோ. சுதாக்குட்டி அழக் கூடாது. அதான் அங்கிள்தா
வாங்கித் தர்றேன்னு அம்மாகிட்ட சொல்லச் சொன்னேன்ல. பி
உஷாமதி. நீங்கள் கொஞ்சம் சமாதானப்படுத்துங்களேன்."

நான் சுதாவை என்னருகில் இழுத்து அணைத்துக்கொண்டே
என் அணைப்பில் ஆறுதல்தான் இருக்கிறது. கோபம் இல்
என்பதை உணர்ந்த சுதாமதி, என் கால்களை வலுவா
பின்னிக்கொண்டாள்.

அப்புறம் சற்று நேரம் பேசிக்கொண்டு இருந்துவிட்டு திவா
புறப்பட்டுப் போனான். என்னை ஓய்வு எடுத்துக்கொள்
சொன்னான். டாக்டர் சொன்னபடி குறைந்தபட்சம் ஒ
வாரமாவது ஓய்வு எடுக்கச் சொன்னான்.



"சரி" என்றேன்.

அவன் ஆணை போல் உரிமையுடன் சொல்லியது எனக்கும் பிடித்திருந்தது. அவன் போனபின் படுக்கையில் மல்லாந்திருந்தேன். என்னை வெட்கம் பிய்த்துத் தின்றது. லிப்டில் அவனுடன் சேர்ந்து இறங்கத் தொடங்கியது நினைவிருக்கிறது. அவன் ஆண்மை என்னை அறியாமல் என் மனதில் கிளர்ச்சியை ஏற்படுத்தியது நினைவிருக்கிறது.

அப்புறம் வெகு திடீரென்றுதான் எனக்குள் ஒரு மாதிரி ரசாயன மாற்றங்களை உணர்ந்தேன். வாயில் அபரிமிதமாக நீர் சுரப்பது போலவும், கைகால்கள் எல்லாம் நடுங்குவது போலவும், 'லிப்ட்' அப்படியே சுழல்வது போலவும்...

'ஐம் ஸாரி' என்று முணுமுணுத்துக் கொண்டே அவன் இருக்கும் இடத்தை அனுமானித்து– அவன் மேல் சாய்ந்தது நினைவிருக்கிறது. 'லிப்ட்' திடீரென்று நின்று போனதால் என் நடுக்கமும், பயமும் அதிகமாகிவிட்டனவா? இந்த உலகில் நான் மட்டும் பாதுகாப்பின்றித் தனியாக இருக்கிறேன் என்ற உணர்வு இன்றைக்கு அவனைப் பார்த்ததும் அதிகரித்துவிட்டதா?

காரணம் தெரியவில்லை. இருந்தும் அப்படிச் சாய்ந்திருக்கக் கூடாது. சாய்ந்தது தப்பு. திடீரென்று உடல் சிலிர்த்தது. என் உடம்பு அவன் மேல் எங்கெங்கு பட்டிருக்கும்? அவன் என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பான்? எவ்வளவு பயந்திருப்பான்? திகில் அடைந்திருப்பான்?

நான் ஒரு மூன்றாந் தரப் பெண் என்று கூட நினைத்திருக்கலாம். என்னை உடனே கை கழுவி விட வேண்டும் என்று கருதி இருப்பான். என்னிடம் இருந்து ஒரேயடியாக விலக வேண்டும் என்று தீர்மானித்து இருப்பான். காலையில் அறிமுகமான அடுத்த விநாடியில் இருந்து அவன் அறையை விட்டு வெளியே வந்து என்னிடம் ஒரு வார்த்தைக்கூட பேசவில்லையே? மற்ற ஆண்கள் எல்லாம் எவ்வளவு தூரம் வந்து பேச முயற்சி செய்திருப்பார்கள்?

வழி வழி என்று வழிந்திருப் … இவன் மட்
வெளியே வந்து என்னைப் பார்க்கவே முயற்சி செய்யவில்
என்னை அவனுக்குப் பிடிக்கவில்லையா? முதல் பார்வை
'என்னைப் பிடித்திருக்கிறது' என்று அவன் கண்கள் தெரிவி
செய்தி உண்மை இல்லையா?

அவன்தான் எனக்காக இன்றைக்கு எவ்வளவு சிரமப்பட்
விட்டான்?

எனக்கு என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை? ஏன் ஒரு பு
ஆண் மகனைப் பற்றி, இன்று காலைதான் அறிமுகமானவனை
பற்றி இப்படியெல்லாம் நினைக்கிறேன் என்று எனக்
புரியவில்லை.

அப்படியே தூங்கிப் போனேன்!

அந்த ஒரு வார விடுமுறையில் திவாகர் என் பிளாட்டிற்
வந்தான். என்னை நலம் விசாரித்தான். நான் தேறி வருகிறேன்
என்றான். சுதாவை 'வாக்கிங்' கூட்டிப் போனான்.

அன்பு. அன்பு. அன்பு.

அவன் சொரியச் சொரிய அந்த அன்பு வற்றாமல் அவனிட
நிறைய இருந்தது. அவன் என்னை அன்பில் திக்குமுக்காட
வைத்துவிட்டான். மூன்றே சந்திப்புகளில் அவன் எனக்
மிகவும் நெருங்கியவன் போல உணர்ந்தேன். சுதாவிற்கு இரண்
முறைகளும் விதவிதமான பரிசுப் பொருட்கள் தந்தான்.

நான் ஆபீஸ் போகத் தொடங்கினேன். இப்போது அவ
ஆபீசில் என்னுடன் சகஜமாகப் பேசத் தொடங்கிவிட்டான். மற்
ஆண்கள் என்னைப் பார்க்கும்போது என் கண்களைச் சந்திக்க
தயங்குவார்கள். அவர்களின் கண்களைப் பார்த்தால், அவர்களி
கண்களில் ஒளிரும் கெட்ட எண்ணங்கள் எனக்கு தெரிந்துவிடு
என்று அவர்கள் பயப்பட்டார்களோ என்னவோ!

ஆனால், திவாகர் அப்படி இல்லை. அவன் கண்கள் என்



கண்களைத் தைரியமாகச் சந்தித்தன. என்னுடன் சகஜமாகப் பேசின. அந்தக் கண்களில் ஆபாசம் இல்லை. நேர்மை இருந்தது. என் அழகை, என் உடலை அவன் கண்கள் பார்த்தாலும் கூட அந்தப் பார்வையில் ஒரு ரசிப்புத் தன்மைதான் தெரிந்தது. விகாரம் இல்லை.

அவன் ஒரு மாதத்தில் அவ்வப்போது என்னிடம் நிறையவே பேசி இருந்தான். அவனுக்கு அம்மா மட்டும். சொந்த கிராமத்தில் இருக்கும் வீட்டைவிட்டு இந்த நகரத்து அவலத்தில் வந்து லோல்பட அம்மாவிற்கு பிரியம் இல்லை.

இந்த வயதிலும் அவளே பொங்கிச் சாப்பிட்டுக்கொள்கிறாள். தினசரி காலை, காவிரியில் நீர் இல்லாவிட்டால் குடமுருட்டி, அதிலும் நீர் இல்லாவிட்டால் வாய்க்கால் என்று தேடிப் போய் துணிகளை அலசி– குளித்துவிட்டு வருவதை ஒரு நியதியாகவே கொண்டிருக்கிறாள். சென்னையில் காவிரிக்கும், குடமுருட்டிக்கும், வாய்க்காலுக்கும் வாய்ப்பே இல்லை என்றுதான் அவள் வருவதே இல்லை.

திவாகர் படித்து முடித்த உடனேயே ராணுவத்தில் சேர்ந்தவன். ஒரு ஆறு ஆண்டு காலம் ராணுவத்தில் பணிபுரிந்துவிட்டு, வேலையில் இருந்து ராஜினாமா செய்துவிட்டு வந்தவன். பல ஊர்களைப் பார்த்து சலித்துப் போய், கடைசியில் சென்னையில் நிரந்தரமாக இருக்கலாம் என்று முடிவு செய்து வந்தவன்.

கல்யாணம்? இன்னும் இல்லையாம். அந்தச் செய்தியைக் கேட்டபோது என்னுள் ஒரு கலர் நீரூற்று பொங்கி புறப்பட்டது உண்மை. அது எதனால்?

நான் அவனை விரும்புகிறேனோ?

அவன் என்னை விரும்புவான் என்று பைத்தியக்காரத்தனமாக நினைக்கிறேனோ?

திவாகரை இதுவரை நான் உங்களுக்கு அறிமுகப்படுத்தவே இல்லையே! எப்படி இருப்பான் என்று சொல்லவே

இல்லையே!

திவாகர் நல்ல உயரம். இன்றைக்கெல்லாம் பார்த்தா
இருபத்தெட்டு வயதிருக்கலாம். எவ்வளவு வயது என்று தெரி
கொள்வதற்காகவே நான் அவன் பர்சனல் பைலை ஒரு மு
திருட்டுத்தனமாய் எடுத்துப் பார்த்தேன். இருபத்தேழு வய
ஆறு மாதம், இருபத்தைந்து நாட்கள். அவன் வயது நான் யூகித்
மாதிரியே இருந்ததில் எனக்கு ஒரு சின்ன சந்தோஷம்.

ஆண்களுக்கு இந்த மாதிரி– பெண்களுக்கு இருக்கிற மாதிரி ஒ
மென்மையான நிறம் அமைவது சிரமம். அவன் அந்த நிறத்தி
இருந்தான். ராணுவத்தில் இருந்தும் எங்கெங்கோ சுற்றியும் கூட
அவன் அந்த நிறத்தில் இருந்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது
நீள நீளமான விரல்கள். நீளமான மூக்கு. நல்ல அகன்ற நெற்றி
சிகரெட் பிடிப்பானோ இல்லையோ, அவன் உதடுகள் ரோஜா
நிறத்தில் இருந்தன. அவன் சிகரெட் பிடித்தால்கூட அவ
கம்பீரம் குறையாது என்றுதான் எனக்குத் தோன்றியது. அவனு
சுருண்ட தலைமுடியில் ஒரு கற்றை மட்டும் அவன் நெற்றியி
வந்து விழுவது அவனுக்குத் தனி அழகைக் கொடுத்தது.

என்னை அறியாமலேயே அவனை நான் நெருங்கி
கொண்டிருக்கிறேன். இது தப்பு உஷாமதி. நீ யார்? சமூகத்தில் உன்
அந்தஸ்து என்ன? மற்றவர்கள் கண்களில் உனக்கு அளிக்கப்படு
மரியாதை என்ன? அதையெல்லாம் மறந்துவிட்டு நீ... நீ...
அவனை விரும்புவது எந்த வகையில் நியாயம்?

மனம் ஆயிரம் கேள்விகள் கேட்கட்டுமே. ம்ஹூம். இன்னொரு
பக்கத்தில் ஆசைத் தீ வளர்ந்துகொண்டே இருந்தது.

இப்போதெல்லாம் ஆபீஸ் விட்டவுடன் திவாகர் என்னுடன் பஸ்
நிலையம் வரை வருகிறான். நான் பஸ் ஏறும்வரை என்னுடன் கூட
நிற்கிறான். நிறையப் பேசுகிறான். பிச்சைக்காரர்கள், குடிகாரர்கள்,
தண்ணீர் கொடுமை, மழை இல்லாமை, அரசியல் முன்னேற்றம்,
ரெயில் விபத்து, சுதாமதியை எந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பது



என்று நிறைய, நிறைய பேசினாலுங்கூட– எனக்கும், அவனுக்குமாக என்று தனிப்பட்ட விஷயங்கள் எதையும் பேசிக்கொள்வதே இல்லை.

அன்றைக்குச் சாயங்காலம் பஸ் நிலையத்தில் நடந்ததை என்னால் மறக்கவே முடியாது. திவாகரிடம் ஒரு 'பைக்' இருக்கிறது. என்னை பஸ் நிலையத்தில் கொண்டு வந்து விடும்போது அதை தள்ளிக்கொண்டு வருவான்.

அவன் கொஞ்சமும் மூச்சிரைக்காமல், என்னுடன் சேர்ந்து வண்டி தள்ளிக்கொண்டு வருவதே ஒரு தனி அழகு. தூர தூரக் காலடி. அந்தக் காலடியில் என் காலடியை வைத்து நடக்க வேண்டும் என்று முயற்சி செய்து, நான் தோற்றுப் போய்விட்டேன். அவ்வளவு அகலத்திற்கும் காலை எடுத்து வைத்தால் என் சேலை கிழிந்துவிடும் போலிருந்தது. 'பைக்'கில் ஒரு நாளாவது அவன் ஏறச் சொல்லமாட்டானா என்று எனக்குத் தோன்றுவதுண்டு. அவன் இன்றைக்குக் கேட்பான். இப்போது கேட்பான் என்று ஏங்கியது கூட உண்டு. அவன் கேட்டதே இல்லை. மகா புருஷர். கண்ணியத்தைக் காப்பாற்றுகிறாராம்.

நானாக எப்படி அவன் வண்டியில் ஏறி வருகிறேன் என்று சொல்ல முடியும்? பெண்மை வெட்கம் அறியாது என்று அவன் மட்டும் நினைத்துக்கொண்டு இருக்கிறானா?

அவனும், நானும் பஸ் நிலையம் வரை போனோம். பஸ் நிலையத்திற்கு சற்றுத்தள்ளி நின்றுகொண்டோம். எப்போதும் நிற்கிற மாதிரி, என் கையில் பத்திரிகை இருந்தது. அதைச் சுருட்டி டெலஸ்கோப்பின் ஒரு பாகம் போல் கையில் வைத்திருந்தேன்.

பஸ் நிலையத்தில் இருந்து கொஞ்சம் விலகி நின்றால் தனிமைக்குத் தனிமை. கூட்டத்தின் பக்கத்தில் நிற்கிறோம் என்ற உணர்வு.

"நீங்கள் ராணுவத்தில் எல்லாம் இருந்திருக்கிறீர்களே திவாகர்!" என்று அவனை மெல்ல வம்புக்கு இழுத்தேன்.

"அதனால் என்ன?"

"உங்கள் வாழ்க்கையில் நிறைய பெண்கள் இடறி இருப்பார்கள் இல்லையா?"

அவன் முகம் சுருங்கிப் போய்விட்டது. ஆனால், உடனே சிரித்தான்.

"ஆமாம், நிறைய பெண்கள்! ராஜஸ்தானில் கோரி, குஜராத்தில் சாந்தினி, மத்தியபிரதேசத்தில் சுஷ்மா, காஷ்மீரில் நான் சந்தித்த நீரஜாவை என்னால் மறக்கவே முடியாது. எவ்வளவு அழகான பெண். எவ்வளவு உடன்பாடான பெண். எவ்வளவு சம்மதமான பெண்?" என்றான்.

எனக்கு ஏன் கேட்டோம் என்றாகிவிட்டது? ராணுவத்தில் இருப்பவர்கள் பெரும்பாலும் பெண்கள் விஷயத்தில் சபலப்புத்திக்காரர்கள்தானே. ஒவ்வொரு ஊரில், ஒவ்வொரு பெண்ணை ருசி பார்க்கும் அடங்காத ஆசை உடைய முரடர்கள்தானே. இவன் மட்டும் எப்படி விதிவிலக்காக இருக்க முடியும்?

இவன் மென்மை முகத்தையும், சுருள் தலைமுடியையும், சிவப்பான உதடுகளையும் பார்த்து இவன் நல்லவனாக இருந்திருப்பான் என்று எதிர்பார்த்தால் அதற்கு அவனா பொறுப்பு? மேலும், இந்த மாதிரி அப்பாவி முகத்தைப் பார்த்தால் எவ்வளவு பெண்கள் ஈ என்று இளித்துக்கொண்டு, 'நான் முந்தி, நீ முந்தி' என்று ஓடி வருவார்கள். ச்சே... இந்த ஆண்களே இப்படித்தான்! இவர்களை நம்பவே கூடாது.

"ஏய்" என்று அவன் குரல் கேட்டது. அவனா? திவாகரா?

திவாகரா என்னை இவ்வளவு உரிமையுடன் 'ஏய்' என்று அழைத்தது. நான் திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்து பார்த்தேன்.

அவன்தான்! என்னைப் புன்னகையுடன் பார்த்தான்.

"நான் சொன்னதெல்லாம் நிஜம் என்று நம்பிவிட்டீர்களா



உஷாமதி?"

நான் மவுனமாய் இருந்தேன்.

"இப்படிப்பட்ட பொம்பளைப் பொறுக்கியுடன் ஏன் பேச ஆரம்பித்தோம் என்றுதானே யோசித்தீர்கள்?"

"இல்லை" என்றேன். தொண்டை ஒரு மாதிரி அடைத்துக்கொண்டிருந்தது. பேச்சு வருவேனா என்றது. கண்களில் நீர் படர்ந்து அவன் உருவத்தை, கானல் நீரில் பிரதிபலிக்கும் பிம்பத்தைப் போல் காட்டியது.

"ச்சே. நான் சும்மா சொன்னேன்" என்றான்.

நம்ப முடியாமல் நான் அவனை நிமிர்ந்து பார்த்தேன்.

"சத்தியம்" என்றான். "ஆனால், என் மனதில் ஒரே ஒரு பெண்ணுக்கு மட்டும் இடம் கொடுத்திருக்கிறேன்."

"யார் அவள்?" என்று கேட்டேன்.

"இப்போது சொல்லமாட்டேன்."

"பின்னே?"

"இன்னொரு நாள்."

"ஏன்?"

"இப்போது சொல்ல எனக்குத் தைரியம் வரவில்லை."

"எப்போது தைரியம் வரும்?"

"ஒரு நாலு பெக் விஸ்கியோ, ரம்மோ குடித்தால் எனக்குத் தைரியம் வரும்! அன்றைக்குச் சொல்கிறேன்" என்றான்.

நான் கையில் சுருட்டி வைத்திருந்த பத்திரிகையால் அவன் தலையில் ஒரு தட்டு தட்டினேன். "ராஸ்கல். குடியெல்லாம் கூட பழக்கம் உண்டா?"

அவன் பதில் சொல்லுமுன், நான் அந்த காரைப் பார்த்தேன். அது ஒரு அயல்நாட்டு கார். நேராகச் சாலையில் போக வேண்டிய அது சடாரென்று இடது பக்கமாகத் திரும்பி– சாலையில்

நின்றிருந்த, சாலைக்கு முதுகும்... எனக்கு முகமும் காட்டிக் கொண்டிருந்த திவாகரை நோக்கி வந்தது. அறுபது கிலோ மீட்டர் வேகமாவது இருக்கும்.

ஒரே கணம். ஒரு கணத்தில் நான் வாழ்நாள் முழுமைக்கும் போதுமான அளவு பயந்து போய்விட்டேன். சடாரென்று திவாகரின் கையைப் பற்றிப் பலமாக இழுத்தேன்.

திவாகர் நின்றிருந்த இடத்திலிருந்து இடம் பெயர்ந்து என் மேல் வலுவாகச் சாய்ந்தான். அவன் பாரம் தாங்க இயலாமல் நான் மல்லார்ந்து விழுந்தேன். என் மேல் திவாகர் விழுந்தான்.

பைக்கை இடித்துத் தள்ளியது கார் . பிளாட்பாரக் கிராதியை இடித்தது. பஸ் நிலையத்துக்குப் பின்னால் ஓடிய ஒரு காம்பவுண்டு சுவர் மீது இடித்து நின்றது. அதன் 'ஹாரன்' இடைவிடாமல் ஒலிக்கத் தொடங்க, அதன் பின் பகுதி கதவு இரண்டும் படார் படார் என்று திறந்துகொண்டு, பின் இருக்கையில் அமர்ந்திருந்த மனிதர் தூக்கி வெளியே எறியப்பட்டார்.

திவாகர் எழுந்தான். நானும் எழுந்தேன். ஓடினோம். அதற்குள் கூட்டம் சேர்ந்துகொண்டது. கார் டிரைவரின் மார்பை 'ஸ்டியரிங்' தாக்கி இருந்தது. நெற்றியில் இருந்து ரத்தம் வழிந்தது. அவன் கொஞ்ச கொஞ்சமாய் உணர்வு இழந்துகொண்டிருந்தான்.

திவாகர் சட்டென்று ஒரு டாக்சியை வழிமறித்து நிறுத்தினான். அதில் டிரைவரை ஏற்றினான். அதிர்ச்சி அடைந்து தரையில் கிடந்த காரின் பின் இருக்கைக்காரரை அதில் உட்கார வைத்தான். நான் முன் இருக்கையில். திவாகர் பின் இருக்கையில்.

டாக்சி, ஆஸ்பத்திரி நோக்கி விரைந்தது.

டிரைவர் கொஞ்ச நேரத்தில் மயக்கம் தெளிந்துவிட்டான். காரின் 'பிரேக்' திடீரென்று 'பெயில்' ஆகிவிட்டதால் தன் கட்டுப்பாட்டை மீறி கார் போய்விட்டது என்றான்.

காரில் பின்னால் உட்கார்ந்து இருந்தவர் ஒரு தொழிலதிபர்.



மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

அன்றிரவு சுதாமதி பக்கத்தில் படுத்திருந்தாலும் திவாகரை நோக்கி வந்த கார், என்னுள் பதற்றத்தை ஏற்படுத்தியது. வாழ்நாள் முழுக்க மறக்க முடியாத ஒரு காட்சி.

திவாகரை அந்த கார் மோதி இருந்தால்... நோ நோ நோ.

மறுநாள் காலை பதினொரு மணி இருக்கும். திவாகர் என் மேசை அருகே வந்தான்.

"என்ன திவாகர்?" என்றேன்.

"கொஞ்சம் வெளியே வருகிறீர்களா?"

"எங்கே?"

"வாசல் வரைக்கும்."

நான் எழுந்தேன். லிப்டில் அவனுடன் கீழே இறங்கும்போது, முதல் முறை அவனுடன் லிப்டில் கீழ் இறங்கிய நாளை நினைத்துக்கொண்டேன். அதற்குப் பிறகு அந்த மாதிரி எல்லாம் எதுவும் நிகழவில்லை என்றாலும், முதல் நாள் 'லிப்ட்' சம்பவத்தை என்னால் மறக்க முடியவில்லை.

இறங்கினோம். கட்டடத்தின் முகப்பில் இருந்த பத்துப் படிகளைத் தாண்டி கீழே காட்டினான் திவாகர்.

குரோமியம் சிவப்பில் ஒரு புத்தம் புது 'பைக்' வெயிலில் பளபளத்தது.

"இது?"

"நேற்று விபத்தில் பழைய 'பைக்' நசுங்கிவிட்டது இல்லையா? அதற்கு இந்தப் புது வண்டி. காம்பன்சேஷன்."

"ஓ... கிரேட்" என்றேன்.

"உஷாமதி"

"என்ன?"

"ஏறக்குறைய நீங்கள் என் உயிரைக் காப்பா இருக்கிறீர்கள்?"

"ஸோ?"

"நான் உங்களுக்கு ஒரு விருந்து தரலாமா?"

"எங்கே?"

"ஓட்டலில்."

அவனோடு தனியாக ஓட்டலுக்குப் போவது என எனக்குப் பிடித்துத்தான் இருந்தது. இருந்தாலும் எ எல்லைகளையும், விளிம்புகளையும் நான் அறிந்து வைத்திரு வேண்டுமல்லவா?

"சுதாவுடன் வரலாமா?" என்று கேட்டேன்.

"ம்" என்றான் திவாகர். அவன் குரலில் சந்தோஷமா, ஏமாற்ற என்று என்னால் இனம் காண முடியவில்லை!

## 4

உஷாமதியை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லையா இல்லை என் மனதைத்தான் அவளால் படிக் முடியவில்லையா?

எனக்கு நிஜமாகவே புரியவில்லை. ஒரு தடவை பார்த்தா உஷாமதி என்னை மிகவும் நெருங்கிவிட்ட மாதிரி எனக்கு தோன்றியது. ஒரு நேரம் பார்த்தால் அவள் ஏதோ ஒரு எல்லை கட்டிக்கொண்டு என்னுடன் பழகுகிற மாதிரித் தோன்றியது.

முத்துவேல் கூட அப்படித்தானே சொன்னான். உஷாம தனக்குத்தானே ஒரு சுவர் எழுப்பிக்கொண்டு இருக்கிறாள் என் தன்னைச் சுற்றி அவள் எழுப்பி இருக்கும் அந்தத் தடுப்பில் உஷாமதியே விரும்பினால்தானே தகர்த்துக்கொண்டு நுழை முடியும்.



என்ன வெட்கம்? நான் சொல்கிறேன். ஐ லவ் உஷாமதி. எனக்கு அவள் ஒரு சிறந்த மனைவியாய் அமைவாள் என்று தோன்றுகிறது. என்னைப் பற்றி அவள் ஒரு கடுகளவோ, ஊசிமுனை அளவோ நினைக்காதவளாய் இருந்தால், ஏன் நான் மாநிலத்திற்கு ஒரு பெண் பழக்கம் என்று சொன்னவுடன் முகம் சுருங்கிப் போக வேண்டும்? என்னை அவள் சிறிதும் நேசிக்காவிட்டால் ஏன் அவ்வளவு தூரம் பதறிப் போய் என்னை இழுத்துத் தன் மேல் சாய்த்துக்கொள்ள வேண்டும்?

கார். என் 'பைக்' சிதறல். டிரைவரின் காயம். கார்க் கதவு திறந்து கீழே விழுந்த பின் இருக்கைக்காரர். அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். அவள் மேல் நான் சாய்ந்து விழுந்த ஒரு கணம் எப்படி உணர்ந்தேன்.

ஏதோ ஒரு பூக்குவியல் மேல், பஞ்சு மெத்தை மேல், தேன் கலந்த 'சாக்லேட்' குவியல் மேல் விழுந்த மாதிரித்தானே கண நேரம் உணர்ந்தேன். அந்த உணர்வே என் வாழ்நாளுக்கும் போதுமென்று அப்போது நான் ஏன் நினைக்கவில்லை?

என் வாழ்க்கையை ஒரே ஒரு பெண் முழுமையாக்கப் போகிறாள் என்று அவளுக்குச் சொன்னேனே தவிர, அவள்தான் அது என்று அவளிடம் சொல்ல எனக்கு நிஜமாகவே தைரியம் வரவில்லை. நான் அவள் மேல் சாய்ந்தபோது, என்ன மனநிலையை அடைந்தேனோ அதே மனநிலையை அவள் அடைந்தாளா என்று எனக்குப் புரியவில்லை. எவனாவது ஒரு விஞ்ஞானி தன் வாழ்நாள் முழுவதையும் பணயம் வைத்து ஆராய்ச்சி செய்து அடுத்தவர் மனதில் என்ன இருக்கிறது என்று கண்டுபிடிக்கும் வழியைக் காண வேண்டும்.

அவளிடம் சொல்லிவிட வேண்டும். இன்று இல்லாவிட்டால் என்றாவது ஒரு நாள் சொல்லித்தானே ஆக வேண்டும்? அதனால்தான் அவளை ஓட்டலுக்கு அழைத்தேன்.

சுதாவுடன் வரப் போகிறாள். ஸோ... வாட்? சுதாவை





வைத்துக்கொண்டு அவளிடம் சொல்ல முடியாதா என்ன?

நான் ஒரு பக்கம் உற்சாகமாய் உணர்ந்தேன். ஒரு பக்கம் திக் திக்காய் உணர்ந்தேன். இன்றைக்குத்தான் அவளை ஓட்டலுக்குக் கூட்டிப் போகப் போகிறேன். ஆபீஸ் செல்லவில்லை. என் பிளாட்டில் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தேன். அவளுடன் எப்படிப் பேசுவது என்று ஒத்திகை பார்த்தேன். எப்படி ஒத்திகை பார்த்தாலும் யோசனையாகத்தான் இருந்தது.


**ராணி முத்து சந்தா விவரம்**

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

**வெளிநாடுகள்**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை–600 007.


பிளாட் அடையாறில் காந்தி நகரின் நான்காவது மெயின் ரோட்டில் அடையாறு ஆற்றின் எதிர்ப்புறக் கட்டடத்தில் அமைந்திருந்தது. என் படுக்கையறை ஜன்னலில் இருந்து பார்த்தால் ஆறு தெரியும். ஆற்றின் குறுக்காகப் பறக்கும் கொக்கு தெரியும். ஆற்றங்கரையின் இந்தப் பக்கத்தில் இருக்கும் மைதானத்தில் கிரிக்கெட் விளையாடும், கால்பந்து விளையாடும் பையன்கள் தெரிவார்கள். சற்று தூரத்தில் அடையாற்றின் குறுக்கே அமைந்த திரு.வி.க. பாலத்தில் ஓடும் மவுன வாகனங்கள் தெரியும். ஒரு சித்திரம் போல அந்தக் காட்சி. நான் கன்னத்தை உள்ளங்கை வைத்து தாங்கி அதை நெடுநேரம் பார்த்திருப்பதைப் போல, என் பக்கத்தில் உஷாமதி அமர்ந்து கன்னந்தாங்கி என்னைப் போல அந்தச் சித்திரத்தை ரசிக்க வேண்டும்.

ஆபீசிற்கு 'போன்' செய்தேன். அவளை அழைத்தேன். வீட்டில் தயாராக இருக்கச் சொன்னேன். வந்து அவளை கூட்டிப்

போவதாகத் தெரிவித்தேன்.

அவள் குரலில் சந்தோஷத்துடன் 'சரி' சொன்ன மாதிரி எனக்குப்பட்டது.

நான் உற்சாகத்துடன் 160 வாட் மின்விளக்கை அதிர வைத்து கொஞ்ச நேரம் 'லவ் ஸ்டிரிங்' கேட்டேன். கொஞ்ச நேரம் ஜேசுதாஸ் கேட்டேன். பாலமுரளி கிருஷ்ணாவின் ஒரு பாட்டிற்குப் பதம் பிடித்துப் பார்த்தேன். ஒரு ஆண் மகன் மேலே சட்டையின்றி, இடுப்பில் வெறும் வெள்ளை பைஜாமாவுடன் இப்படி நடனம் ஆடிக் கொண்டிருப்பதை உஷாமதி பார்த்தால் என்ன ஆகும்? அவள் என்னைப் பற்றி என்ன நினைப்பாள்?

இப்படி எண்ணம் வந்த உடனேயே நான் நடனம் ஆடுவதை நிறுத்திவிட்டேன். குளியலறையில் நுழைந்து கிளீன் ஷேவ் பண்ணி, குளித்து, ஆப்டர் ஷேவ், பவுடர், கொலோன் என்று முழுக்க முழுக்க மணத்தில் என்னை நனைத்துக்கொண்டேன்.

இந்த சந்தர்ப்பத்திற்குத் தகுந்த மாதிரி உடை அணிய வேண்டும் என்று முதலில் நினைத்து, அப்புறம் அவளை முதன் முதலில் சந்தித்தபோது என்ன உடையில் சந்தித்தேனோ அதே உடையில் சந்திப்பது என்று தீர்மானித்தேன். வெளிர்நீல சட்டை– கருநீல பேண்டு அணிந்தேன். ஒரு மாறுதலுக்கு 'டை' அணிந்தேன். ஷூ அணிந்தேன். இன்றைக்கு உஷாமதியை பைக்கில் கூட்டிப் போக வேண்டும். வருவாளா என்று தெரியவில்லை.

ஆனாலும் வாழ்க்கை முழுவதும் துணைக்கு வருகிறாயா என்று கேட்கப் போகிறவளிடம், ஒருமுறை வண்டியின் பின்னால் வருகிறாயா என்று கேட்டால் தப்பா என்ன?

சரியாக ஆறு மணிக்கு நான் அவள் பிளாட் வாசலில் இருந்தேன். மணியை அழுத்தினேன். உஷாமதிதான் கதவு திறந்தாள். எனக்கு பிரமிப்பாக இருந்தது.

உஷாமதியா அது? தேவதை போல கருநீல சேலை



கட்டி இருந்தாள். கருநீலத்தில் ரவிக்கை. ரவிக்கையின் கை குட்டையாக இருந்தது. தோள்பட்டை அருகே விரிந்திருந்தது தனிக்கவர்ச்சியாக இருந்தது. எப்போதும் லேசான 'லோ–ஹிப்' இருக்கும். கவனித்திருக்கிறேன். இன்றைக்குக் கொஞ்சம் அதிகமாக 'லோ–ஹிப்' கட்டியிருந்தாள். நறுமணத்தை கொஞ்சம் அதிகமாக விசிறி விட்டிருந்தாள். எவ்வளவு விரும்பத் தக்கவளாக இருந்தாள்?

"வாருங்கள்" என்றாள்.

அகலமான சிரிப்பு. ஆரோக்கியமான பற்களுடன் ரோஜா நிற ஈறுகள். அவளை அப்படியே ஏந்திக்கொள்ள வேண்டும் போல உணர்ந்தேன். "ஒரு பெக் காப்பி?" என்று இறைஞ்சும் குரலில் கேட்டாள்.

"ஓ. யெஸ்" என்றேன்.

"நாணும்மா. காப்பி" – உற்சாகக் குரலில் உள்ளறையில் இருந்து சுதாமதி வெளியே வந்தாள். பிரில் பிரில்லாய் ஒரு உடை. பால் வெண்மையில் குட்டி தேவதை போல் இருந்தாள்.

நாராயணி அம்மாள் முகத்தில் சந்தோஷத்துடன் நாங்கள் பிளாட்டை விட்டு வெளிப்படுவதைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

லிப்டில் இறங்கும்போது கேட்டேன்.

"உஷாமதி."

"ம்" என்றாள். கழுத்து நிமிர்த்தி கன்றுக்குட்டி பார்ப்பது போல் பார்த்தாள்.

"இன்றைக்கு பைக்கில் என் பின்னால் உட்கார்ந்து வருவீர்களா?"

அவள் சற்று நேரம் மவுனமாகப் பார்த்தாள். லிப்டில் வெறும் மின்விசிறி ரீங்காரம் மட்டும்.

லிப்ட் தரைத் தளத்தைத் தொட்டது. எனக்கு இன்னும்

உஷாமதியின் பதில் கிடைக்கவில்லை. என்ன சொல்லப் போகிறாள் என்றே தெரியவில்லை.

நாங்கள் மூவரும் படிகளை இறங்கிக் கடந்தோம். நான் இன்னொரு முறை கேட்பதாக இல்லை. அவள் மனதில் என்னென்ன உணர்ச்சிகள் பொங்குகிறதோ? அவன் என்னைவிட அவளிடம் அன்பாக இருந்திருக்கலாம். இத்தனை நாட்களில் உஷாமதி கணவனைப் பற்றி பேசினதில்லை. நானும் அவள் மனம் புண்படும் என்ற காரணத்திற்காகவே கேட்டதில்லை.

கணவன் என்ன... அவள் அம்மாவைப் பற்றியும், அப்பாவைப் பற்றியும் கூட என்னிடம் பேசினதில்லை.

வண்டியை நெருங்கும் நேரத்தில் உஷாமதி நின்றாள்.

“சுதா, நீ பைக்கில் முன்னால் உட்கார்ந்து கொள்கிறாயா?”

“ஓ. யெஸ்” என்றாள் சுதாமதி சந்தோஷத்துடன். ஷூக் கால்களால் ஒரு குதிகுதித்தாள்.

உஷாமதி என்னைப் பார்த்தாள்.

“சுதாவுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. சந்தோஷமாக உட்கார்ந்து கொள்ளுகிறாளாம். நானும் உட்கார்ந்துகொள்கிறேன்” என்றாள்.

நான் உலகமகா சந்தோஷத்தில் இருந்தேன். பைக்கை ‘ஸ்டார்ட்’ செய்தேன். சுதாமதியை முன்னால் தூக்கி உட்கார வைத்தேன். அவள் நழுவி ஏறிப் பின்னால் உட்கார்ந்தாள்.

என் தோளில் ஒரு கை வைத்தாள் உஷாமதி. மெல்லப் பற்றினாள். அவளின் தொடை என் மேல் லேசாக உராய்ந்தது. உடல் முழுக்க சிலிர்த்தது. ஒருகணம் தேவலோகம் சென்றடைந்த மாதிரி உணர்ந்தேன்.

“போகலாம்” என்று சொல்லி என் தோளில் லேசாக ஒரு தட்டு தட்டினாள்.

நான் ஒரு ஜெர்க்குடன் வண்டியைச் செலுத்தினேன்.



தி.நகரில் புதிதாக வந்திருந்த அந்த ஓட்டல் காம்பவுண்டில் வண்டியை நுழைத்து நிறுத்தினேன். காம்பவுண்டு சுவர் நெடுக ஐந்தடிக்கு ஐந்தடி ஒரு கம்பம் நடப்பட்டு– ஊதா, பச்சை, மஞ்சள் என்று சாட்டின் கொடிகள் பறந்த நிலா வெளிச்ச சொர்க்கம்.

அதன் பெரிய பரந்த குளிர்வசதி செய்யப்பட்ட ஹாலில் நுழைந்தோம். ஒரு மூலையில் இருந்த மேசையை நோக்கிச் சென்றேன். உட்காரச் சொல்லி நாற்காலியை இழுத்து ஒரு ராஜகுமாரிக்குச் செய்யும் உபசாரம் செய்தேன்.

அவள் அமர்ந்தாள். சுதாவை உட்கார வைப்பதற்குள் ‘பேரர்’ எங்களை நெருங்கினான்.

“பாப்பாவிற்கு குஷன் போடுகிறேன் சார்” என்று அவளுடைய நாற்காலியில் தனியாக ஒரு குஷன் போட்டான். சுதா ‘தாங்க்ஸ்’ சொன்னாள்.

ஒரு இரண்டரை வயதுக் குழந்தை அவ்வளவு சூட்டிகையாக ‘தாங்க்ஸ்’ சொன்னது கேட்டு அவன் ஆச்சரியப்பட்டுப் போய், “என்னோடு வரியா... உனக்கு முயல், மீனெல்லாம் காட்டுறேன்” என்றான்.

“எங்கே?”

“அதோ அங்கே” என்று அவன் கைநீட்டிக் காட்டிய திசையில் நிஜமாகவே மீன் தொட்டிகளில் மீன்கள் உலாவின. பெயிண்டு அடித்த கூண்டுகளில் முயல்கள் துள்ளின. இன்னொரு கூண்டில் காதல் பறவைகள்.

சுதா உடனே அவனுடன் கிளம்பிவிட்டாள்.

நானும், உஷாமதியும் எதிரெதிரே! நான் அவளைப் பார்த்தேன். அவள் என்னைப் பார்த்தாள். அவள் பார்வையில் அதீதமாகக் கருணை இருந்தது.

பேரரிடம் இனிப்பு, அப்புறம் காரம் என்று என்னென்னவோ ‘ஆர்டர்’ பண்ணினேன். அவன் புரிந்துகொண்டு விலகினான்.

"கொஞ்சம் 'லேட்'டாகக் கொண்டு வரலாமில்லையா?"

"தாராளமாக."

எங்கிருந்து என்று தெரியாமல் ஹால் முழுக்க சன்னமா இசை கசிந்துகொண்டிருந்தது.

"உஷாமதி"

"ம்"

"நான் உங்களை ஒருமையில் கூப்பிடலாமா?"

"நான் வேண்டாமென்று என்றைக்காவது சொன்னேனா திவாகர்?"

"தாங்க்யூ உஷா" என்றேன்.

"எதற்கு இந்த தாங்க்ஸ்?"

"எல்லாவற்றுக்கும்."

"எல்லாவற்றுக்கும் என்றால்?"

"என் உயிரைக் காப்பாற்றியதற்கு, என் பின்னால் வண்டியில் உட்கார்ந்து வர சம்மதித்ததற்கு, உன்னை ஒருமையில் கூப்பிட அனுமதி கொடுத்ததற்கு... எல்லாவற்றுக்கும்."

"ஐயாவிற்கு இன்றைக்கு மூடு ஒரு மாதிரி போலிருக்கிறது."

"ஆம்"

"உடையெல்லாம் அமர்க்களமாக இருக்கிறது."

"நீ மட்டும் என்னவாம்... உனக்கு இந்த 'லோ-ஹிப்' ரொம்ப நன்றாக இருக்கிறது?"

"அங்கேயெல்லாம் பார்வை போகிறதோ?" என்று கொஞ்சம் கடுமையாகக் கேட்டாள்.

நான் தைரியசாலி. அர்ஜுனனிடமும், கர்ணனிடமும் வரம் வாங்கி வந்திருப்பவன். அவள் கடுமை கண்டு அயரவில்லை.

"நான் பார்க்கக் கூடாதென்றால் ஏன் இப்படிக் கட்டுகிறாயாம்.



ரசிப்பது தப்பா?"

"சேச்சே. நான் சும்மா விளையாட்டிற்குச் சொன்னேன். பிடித்திருக்கிறதா?"

"எது?"

"அதான். நீங்கள் சொன்னீர்களே."

"எது?" என்று இன்னொரு முறை கேட்டேன். அவள் வாயால் சொல்லட்டுமே!

பெண்களுக்கு இந்த மாதிரி ரசிக்கக் கூடிய கள்ளத்தனம் அதிகம். ஆண்கள்தான் எல்லாவற்றிலும் முதலில் நிற்க வேண்டும். அந்த மாதிரி தங்களை வெளிப்படுத்திவிட்டு விழப்போவது சந்தன மாலையா? இல்லை செருப்படியா? என்று அவர்கள்தான் படபடக்கும் நெஞ்சுடன் காத்திருக்க வேண்டும். அதனால்தான் எனக்கு அவளிடம் கொஞ்சம் விளையாடிப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது.

அவள் ஒரு வெட்கப் புன்முறுவல் பூத்தாள்.

"லோ-ஹிப்" என்றாள் ரகசியமான குரலில்.

"அப்பா... இப்போதாவது சொன்னாயே?" என்றேன்.

'பேரர்' வருவதற்குள் முயல், மீன் பார்த்துக் கொண்டிருக்கும் சுதாமதி மீள்வதற்குள் நான் அவளிடம் என் எண்ணத்தைச் சொல்லியாக வேண்டும்.

"உஷா" என்றேன்.

"சொல்லுங்களேன்" என்றாள்.

நான் எவ்வளவோ ரகசியம் சொல்லப் போகிறாற் போலவும், அதை அவள் சரியாகக் கேட்க வேண்டும் என்பதற்காக முன்னால் வந்தது போலவும் இருந்தது.

"இந்த வாழ்க்கை நீர்க்குமிழி மாதிரி உஷா."

உஷாமதி ஒன்றும் சொல்லாமல் என்னைப் பார்த்தாள்.

"நீர்க்குமிழி எப்போது உடையும் என்றே யாராலும் சொ
முடியாது."

உஷாமதி தலையை மட்டும் மேலும், கீழுமாக ஆட்டினா

"அதனால் வாழ்கிற வரைக்கும் சந்தோஷமாக வா
வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. அன்றைக்கு கா
இடித்திருந்தால் என் நீர்க்குமிழி வாழ்க்கை வெடித்துப் போயிருக்
வேண்டியதுதானே?"

"இப்போது நீங்கள் சந்தோஷமாக வாழவில்லைய
திவாகர்?"

"என் மனதுக்குப் பிடித்த மாதிரி வாழவில்லை."

"அப்படி வாழ வேண்டுமென்றால் என்ன செய்ய
வேண்டும்?"

"என் 'லைப் பார்ட்னர்' எனக்குப் பிடித்தவளாக அமைய
வேண்டும்."

"அப்படி யாராவது இருக்கிறார்களா திவாகர்? சொல்லுங்கள்.
அந்தப் பெண்ணையே உங்களுக்குக் கல்யாணம் செய்து வைக்க
ஏற்பாடு செய்கிறேன்."

"நிச்சயமாக!"

"ஆமாம். நீங்கள் கூட அன்றைக்குச் சொல்ல ஆரம்பித்தீர்களே...
உங்கள் மனதில் ஏதோ ஒரு பெண் இருப்பதாக! யார் சொல்லுங்கள்
திவாகர்."

"நீதான் உஷா."

அவள் நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். அவள் கண்களில்
கரகரவென்று கண்ணீர்.

"முடியாது திவாகர். அது மட்டும் முடியாது" என்று கிரீச்
குரலில் கத்தினாள் உஷாமதி.

தூரத்தில் முயல் பார்த்துக் கொண்டிருந்த சுதாமதி, அம்மாவின்
குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்து ஓடி வந்தாள்.



உஷாமதியின் கண்களில் கண்ணீரைப் பார்த்து விட்டு அதற்குக்
காரணம் நான்தான் என்று அவளாகவே தீர்மானித்து, என்னை
எதிரியைப் பார்ப்பது போல் பார்த்தாள்.

தள்ளுவண்டியுடன் எங்களை நோக்கி வந்து கொண்டிருந்த
'பேரர்'– மேலே எங்களை நோக்கி வருவதா... வேண்டாமா என்று
புரியாமல் உறைந்து போய் நின்றான்.

நான் மிகக் கேவலமாக உணர்ந்தேன்.

## 5

**அ**தற்குப் பின் ஓட்டலில் எதுவுமே ருசிக்கவில்லை. திவாகரை
எவ்வளவு முடியுமோ அவ்வளவு அவமானப்படுத்திவிட்டேன்.
ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் திவாகர் இந்த மாதிரி
என்னிடம் சொல்லப் போகிறான் என்று எதிர்பார்த்துத்தானே
இருந்தேன். அதை நானும் விரும்பித்தானே இருந்தேன்.

இருந்தும், இருந்தும் ஏன் நான் அந்த மாதிரி உணர்ச்சிகளின்
எல்லை மீறி வெடித்தேன்.

திவாகர் நான் மறுத்ததை வேறு மாதிரி எடுத்துக்கொண்டான்.
நான் இன்னும் என் கணவனின் நினைவுகளில் இருந்து மீளவில்லை
என்று எண்ணிக்கொண்டான். என் கணவன் விபத்தில் இறந்து
போனதை என்னால் மறக்க முடியவில்லை என்று நினைத்துக்
கொண்டான். எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் எனக்காக
காத்திருப்பதாகச் சொன்னான்.

மவுனமாகச் சாப்பிட்டோம். மவுனமாக அவன் பின் அமர்ந்து
வீடு வந்தேன். ஓட்டலுக்குப் புறப்படும்போது அவன் பின்னால்
அமர்ந்தபோது எவ்வளவு கிளுகிளுப்பாக உணர்ந்தேன் என்பது
எனக்கு மட்டும்தான் தெரியும். அவன் தோளைப் பற்றியபோது,
அவனது தோளில் செல்லமாக ஒரு தட்டு தட்டியபோது
என்னுள் ஜிவ்வென்று மின்சாரம் பாய்ந்தது. எனக்கே உரிய ஓர்

ஆண்மகனைத் தொடுகிற மாதிரிதான் உணர்ந்தேன்.

இருந்தும்... இருந்தும்...

வீடு திரும்பும்போது கிட்டத்தட்ட பத்து மணி ஆகிவிட்டது. சுதாமதி என் தோளில் தூங்கி இருந்தாள். ஒரு கையால் அவளைப் பற்றிக்கொண்டு, ஒரு கையால் அவனைப் பற்றிக்கொண்டு பிளாட்டின் காம்பவுண்டில் வண்டி நுழைந்து நின்றதும் இறங்கினேன்.

யாரும் எங்களைக் கவனிக்கவில்லை. பிளாட் சிஸ்டத்தில் இது ஒரு வசதி. யார் வருகிறார்கள்? யார் போகிறார்கள்? என்பது பற்றி யாருமே கவலைப்படுவதில்லை.

சுதாவை திவாகர் என் தோளிலிருந்து கைமாற்றிக்கொண்டார். லிப்ட் தரைத் தளத்திலேயே இருந்தது. உள்ளே நுழைந்து நான் 'ஸ்விட்ச்' போட்டேன்.

அவன் என் படுக்கை அறையில் நுழைந்து, சுதாவை படுக்கையில் கிடத்தினான். முதல் தடவையாக திவாகர் என் படுக்கை அறைக்குள் நுழைகிறான். சுற்றிலும் பார்த்தான். படுக்கை அறையின் விளக்கு வெளிச்சத்தில் வெளியே இருந்த மஞ்சள் மலர்கள் தெரிந்தன. அவன் அதை சற்று நேரம் உற்றுப் பார்த்தான். பின் என்னைப் பார்க்காமலேயே "குட் நைட்" என்று முணுமுணுத்துவிட்டு வெளியேறினான்.

அவனை இங்கேயே இருக்கச் சொல்ல வேண்டுமென்று தோன்றியது. அவனை ஆரத்தழுவி ஒரு முத்தமிட வேண்டும் என்று தோன்றியது. என் முத்தம் அவனுக்கும் அபார பலம் தரும். எனக்கும் அபார ஆறுதல் தரும். என்னைப் போற்றிப் பாதுகாக்க ஒரு நல்ல ஆண் மகன் எனக்குக் கிடைத்துவிட்டான் என்ற பாதுகாப்பு உணர்வைத் தரும்.

நாராயணி கூட திவாகர் வெளியேறிய பின் ஒரு பெருமூச்சு விட்டு அந்த மாதிரித்தான் சொன்னாள்.

"உஷாமதி."



"என்ன நாணும்மா."

"அவன் நல்ல பையன்."

"ம்."

"நம்ம சுதாவுக்கு ஒரு நல்ல அப்பாவா அவன் இருப்பான்னு எனக்குத் தோணுது."

மனதில் இருந்ததை பயப்படாமல் நாராயணி சொல்லிவிட்டாள்.

"என்ன பேசாம இருக்கே? ஒனக்குக் கூட அவன் ஒரு நல்ல புருஷனா இருப்பான் உஷாமதி."

நான் பதில் சொல்லாமல் படுக்கை அறைக் கதவைச் சாத்தினேன். சேலை கூட மாற்றாமல் அப்படியே கட்டிலில் சாய்ந்தேன். மல்லார்ந்தேன். அடக்கி, அடக்கி வைத்திருந்த கண்ணீர் இப்போது அடம்பிடிக்கும் பிடிவாதக் குழந்தையாக என் கண்களில் இருந்து பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது.

நான் எல்லாவற்றையும் எப்படிச் சொல்வேன்? என்னைச் சுற்றி ஒரு வலை பின்னிக் கொண்டிருக்கிறேன். சிலந்தியின் எக்கச்சக்க இழைகளால் ஆன வலை போல, எக்கச்சக்க பொய்களால் ஆன ஒரு வலை.

அந்தப் பொய்களை எல்லாம் உடைத்தால் திவாகர் என்னைவிட்டு விலகிவிடுவான்.

'ச்சீ, இவ்வளவு கேவலமானவளா நீ?' என்று என்னை நினைத்துக்கொள்வான். ஒரே ஒரு முறை, திவாகர் என்னை அப்படி சொல்லிவிட்டாலே போதும். என் உயிர் எனது உடலில் தங்காது. நான் போய்விடுவேன்.

எப்படிச் சொல்வேன் என் வாழ்க்கையின் ரகசியங்களை? எப்படிச் சொல்வேன் என்னைப் பற்றிய உண்மைகளை?

நான் இன்னும் கல்யாணம் ஆகாதவள்.

சுதர்சன் தான் என் கணவர் என்று நான் மற்றவர்களிடம்

சொல்லி இருக்கிறேன். அவர் ஒரு விபத்தில் செத்துப் போய்விட்ட என்று நான் மற்றவர்களை நம்ப வைத்திருக்கிறேன். உண்மையி சுதர்சன் என்பது முழுக்க முழுக்க ஒரு கற்பனைப் பெயர் என் இனிமேல் எப்படிச் சொல்வது? சுதாமதியின் அப்பா இன்னு உயிரோடுதான் இருக்கிறார் என்று சொன்னால் என்ன ஆகும் எனக்காக ஒரு தாஜ்மகால் கூட கட்டத் தயாராய் இருக்கு திவாகர், நான் இந்த உண்மையைச் சொன்னால் என்னை சாக்கடை நீரைவிட மோசமாக நினைக்கமாட்டான்?

வியாஸ். வியாஸ்தான் சுதாமதியின் அப்பா. இன்னும் டெல்லியில் இருக்கிறார். என்னைப் பற்றி நினைத்துக்கொண்டிருப்பார். ஒரு நல்ல தருணத்திற்காக காத்துக்கொண்டு இருப்பார். அவர் நினைக்கும் தருணம் வந்தவுடன், நேரே இங்கே வந்து என் மூக்கில் ஒரு மூக்கணாங்கயிறு மாட்டி இழுத்துக்கொண்டு போய்விடுவார். நான் அவர் பின்னால் வேறு வழியின்றி பலிக்குச் செல்லும் ஆடாகப் போயாக வேண்டும்.

என்ன ஒரு விசித்திரமான உறவு, அது.

புதுடெல்லி. எனக்கு இருபது. இளமைத் துள்ளல் நிறைந்த வயது. சாலையில் போகிற, வருகிற பையன்களை தைரியமாக 'டீஸ்' பண்ணத் தூண்டும் திமிர் பிடித்த ரத்தம் ஓடிய வயது. நான் மாமாவின் வீட்டில் இருந்தேன். என்னுடன் அம்மா. இரண்டு பேரும் ஒரு விதத்தில் மாமாவிற்குப் பாரமாகத்தான் இருந்தோம்.

அப்பா, அம்மா நான் என்று கல்கத்தாவில் கவலையின்றி கழித்த நாட்கள் திடீரென்று மாயமாகிவிட்டன. கல்லூரி கடைசி ஆண்டில் அப்பாவை மாரடைப்பு இழுத்துக்கொண்டு போய்விட்டது. என் ஒரே அண்ணன் அப்பாவை எதிர்த்துக் காதல் கல்யாணம் செய்தவன், இப்போது எங்கு இருக்கிறான் எனறு எனக்கும் தெரியாது. அம்மாவிற்கும் தெரியாது.



அப்பா 'பெங்காலி காட்டன்' விற்றுச் சம்பாதித்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பின் கடைக்குப் போய் பார்த்தால், அப்பா கொடுக்க வேண்டிய கடன்களுக்கும், கடையில் இருந்த சரக்கிற்கும் கணக்கு சரியாக இருக்கும் போலிருந்தது. ஒரு இளம்பெண், வாழ்க்கையில் அனுபவமற்றவள். கடையில் உட்கார்ந்து வியாபாரம் செய்வதை அம்மா ரசிக்கவில்லை. கடையின் கதவு மூடப்பட்டன. பஜாரில் கடையை அள்ளிக்கொள்ள நூறு பேர் இருந்தார்கள்.

கணக்குகள் தீர்ந்தபின் அம்மாவின் கையில் பத்தாயிரமோ என்னவோ இருந்தது. என்னையும் ரெயிலில் ஏற்றி டெல்லிக்கு அழைத்து வந்து, மாமா காலில் விழ வைத்துவிட்டாள். மாமா அம்மாவையும், என்னையும் ஆதரிக்க தயாராய் இருக்கலாம். மாமி ஆதரிப்பாளா?

போன கொஞ்ச நாளில் எல்லாம் மாமியின் முகமூடி கிழிந்துவிட்டது. நான் வேலைக்குப் போக வேண்டும். சம்பாதிக்க வேண்டும். அப்படி என்றால்தான் மாமா வீட்டில் இருக்க முடியும். இல்லையா? கெட்–அவுட்.

சுருக்கெழுத்து கற்றுத் தர இரண்டு ஆண்டுகளாவது ஆகும் போலிருந்தது. டைப்ரைட்டிங் தெரியும். குறுக்கு வழி சுருக்கெழுத்தை நானே செலவின்றி கற்றுக்கொண்டேன்.

**if u k rd th msj**

**u k bkm a sec k**

**gt a gd jb**

ஆங்கிலம் தெரிந்த யாரும் நான் மேலே எழுதி இருப்பதைப் படிக்க முடியும்.

**if you can read this message you can become a secretary and get a good job** என்று அந்த எழுத்துகள் விரியும்.

'இந்தச் செய்தியை உன்னால் படிக்க முடியும் என்றால் நீ

ஒரு நல்ல செயலாளராக வர முடியும். அதனால் ஒரு நல்ல வேலையையும் பெற முடியும்' என்று தமிழில் பொருளாகும். நீங்களும் முயற்சி செய்து இந்த மாதிரியான ஒரு சுருக்கெழுத்தைப் பயிலலாம். இப்படித்தான் நான் சுருக்கெழுத்தைக் கற்றேன். இதை வைத்துக்கொண்டு டெல்லியில் ஒவ்வொரு கம்பெனியாக ஏறி இறங்கினேன். ராமகிருஷ்ணாபுரத்தில் இருந்து கன்னாட் சர்க்கிள், குருத்வாரா, சாணக்கியபுரி, வசந்த் விஹார் என்று நடந்தே அலைந்தேன்.

கடைசியில் கன்னாட் சர்க்கிளில் கிரானைட் கற்களை ஏற்றுமதி- இறக்குமதி செய்யும் கம்பெனி ஒன்றில் வியாஸைச் சந்தித்தேன். வியாஸிற்கு நாற்பத்து மூன்று வயது இருந்தும் முகத்தில் வயது தெரியாதவர். தலை நரைத்து 'டை' அடித்துக் கொண்டிருந்தாரோ என்னவோ? ஆனால்; ஒரு முடிகூட வெள்ளை இல்லை. 'எக்ஸிக்யூட்டிவ்' கண்ணாடி அணிந்திருந்தார். என்னைப் பார்த்ததும் கண்ணாடியைக் கழற்றினார். அவருடைய சபாரி சூட்டை அட்ஜஸ்ட் செய்துகொண்டு எதிரில் உட்காரச் சொன்னார்.

உட்கார்ந்தேன். "வேலை தேவை" என்றேன். என் சுருக்கெழுத்து திறமை பற்றி சொன்னேன். டைப்ரைட்டிங் திறமை பற்றி தெரிவித்தேன். வியாஸிற்கு என்னைப் பிடித்துவிட்டது. என் ஆங்கிலம், என் திறமை, என் அழகு, என் நளினம் - இவற்றில் எது அவரைக் கவர்ந்ததென்று எனக்குத் தெரியாது. கவர்ந்துவிட்டது.

வியாஸ் எனக்கு வேலை கொடுத்தார். மாமியின் கோரமான வார்த்தைகளில் இருந்து, சாபங்களில் இருந்து என்னை மீட்ட கிருஷ்ண பகவான்.

அந்த கம்பெனியில் அவர் மேனேஜராக இருந்தார். ஒரு டைப்பிஸ்டை 'வேலைக்கு வைக்கும் அதிகாரம் அவருக்கு இருந்தது. வைத்துவிட்டார். நானும் 'செட்டில்' ஆகிவிட்டேன்.



இரண்டு மாதங்கள் வேலை செய்திருப்பேன். அம்மாவுக்கு என் அண்ணன் ஒரு கடிதம் எழுதித் தன் இருப்பிடத்தைத் தெரியப்படுத்திவிட்டான். அவனுக்கு அம்மா தேவைப்பட்டாள், அவனுடைய குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள !

அம்மாவை பாசம் இழுத்தது. என்னையும் இழுக்கப் பார்த்தாள். தேள் விஷத்தில் இருந்து தப்பி, பாம்பு விஷத்தில் மாட்ட நான் தயாராக இல்லை. அம்மாவை மட்டும் அண்ணா இருக்கும் முஸாபர் கஞ்சிற்கு அனுப்பி வைத்தேன்.

நான் மாமா வீட்டில் இருந்து விலகி தனியாக ஒரு பிளாட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டேன்.

வியாஸிற்கு பதவி உயர்ந்தது. மானேஜர் பதவியில் இருந்து அவர் எக்ஸிக்யூட்டிவ் டைரக்டராக மாறினார். அவருடைய அயராத உழைப்பிற்கு கம்பெனி கொடுத்த பரிசு. ஏ.சி. அறை, கார், வசந்த் விஹாரில் வீடு என கம்பெனி அவருக்கு வாரி வழங்கியது. வியாஸ் என்னைத்தான் தனிச் செயலாளராக மாற்றிக்கொண்டார்.

எனக்கு வேலை செய்ய ஒரு குறிப்பிட்ட நேரம் இல்லை. காலையில் போவேன். இரவு ஏழு, எட்டு என்று வேலை செய்ய வேண்டியிருக்கும். செய்வேன். வியாஸ் தன் காரில் என் பிளாட் வரை கொண்டுவந்து விடுவார். ஒரு நாள்கூட என் பிளாட்டின் உள்ளே வியாஸ் நுழைந்ததே இல்லை. அவ்வளவு கண்ணியம். ஒவ்வொரு முறை தாமதமாகும்போதும் ஏதோ ஒரு குற்ற உணர்வு அரிக்க என்னைக் கொண்டு வந்து பிளாட்டில் விடுவார்.

வியாஸ் இப்போது கம்பெனியின் 'எக்ஸிக்யூடிவ் டைரக்டர்' என்பதால் நிறைய ஊர்களுக்குப் பயணம் போக வேண்டியிருந்தது. எங்கெல்லாம் கிரானைட் கற்களை வெட்டி எடுக்கிறார்களோ அங்கெல்லாம் போவார்.

ரெயில் என்றால் முதல் வகுப்பு. விமானம் என்றாலும் முதல் வகுப்பு. கூடவே என்னையும் அழைத்துக்கொண்டுதான்

போவார். அவருக்கு நான் இல்லாமல் எந்த வேலையும் ஓடாது. போகும் இடங்களில் எல்லாம் நட்சத்திர ஓட்டல்களில் அறை எடுக்கச் சொல்வார். எனக்கு ஒரு அறை. அவருக்கு ஒரு அறை. நல்ல தரமான உணவு.

அவருக்குச் சம்பளம் ஏறிய மாதிரியே எனக்கும் சம்பளம் ஏறியது. நிறைய சேலைகள், நிறைய அணிகலன்கள். நிறைய எல்லாமே. எனக்கு என் வேலையே சரியாக இருந்ததால் அந்த வயதில் யாரையும் காதலிக்கத் தோன்றவில்லை. எந்த இளைஞனும் என்னை வசீகரிக்கவில்லை. என்னைப் பொறுத்தவரை இளைஞர்கள் எல்லாம் சோம்பேறிகளாகத் தெரிந்தார்கள். படித்தும், படிக்காமலும் அம்மா–அப்பா வியர்வை சிந்த சேகரித்த காசை கஞ்சாவிலும், மதுவிலும், பெண்களிடமும் விரயம் செய்யும் சோம்பேறிகள். நாற்பத்து மூன்று வயதிலும் சுறுசுறுப்பாக உழைக்கும் வியாஸ்தான் என் ஆதர்ஷ ஆண்.

ஒரு நாள் வியாஸ், வசந்த் விஹாரில் இருக்கும் தன் வீட்டிற்கு உணவருந்த வரச்சொன்னார். அப்படி அவர் ஒரு நாளாவது அழைக்கமாட்டாரா என்று ஏங்கிக்கொண்டிருந்த நேரம், அது.

ஒரு ஞாயிறு. நல்லவிதமாக உடை உடுத்திக்கொண்டு போனேன். அவர் காம்பவுண்டு வாசலில் இறங்கியபோது பிரமித்தேன்.

எவ்வளவு பெரிய வீடு. நிறைய தோட்டம். அதில் வட்டமாக, சதுரமாக, முக்கோணமாக, செவ்வகமாகப் புல்வெளி அமைக்கப்பட்டு, புற்கள் சீராக முடி திருத்தப்பட்டிருந்தன. புல்வெளிகளின் நடுவே விளக்குக் கம்பங்கள். விளக்குக் கம்பங்களின் உச்சியில் விளக்குகள். சில இடங்களில் வர்ணக் குடைகள். குடைகளின் கீழே பெயிண்டு அடிக்கப்பட்ட மர பெஞ்சுகள் வளைந்து வட்டமாக நின்றன.

வேலைக்காரன் 'ஹோஸ் பைப்' வழியாக நீர் பாய்ச்சினான். ஒரு ...ங்கான் கன்னி தன்னைச் சுற்றியிருந்த செயற்கைக் குளத்தில் நீர் ...ார்த்துக்கொண்டிருந்தாள் – நிர்வாணமாக. போர்டிகோவில்





கிரானைட். முகப்புச் சுவர் முகம் தெரியும் கிரானைட். என் கால் பட்டாலே அழுக்காகிவிடும் என்று என்னைப் பயமுறுத்தும் அளவு பளபளத்துக்கொண்டிருந்த போர்டிகோவில் செருப்பு பதித்து நடந்தேன்.

வியாஸ் வாசலுக்கே வந்து என்னை வரவேற்றார். வெள்ளை பைஜாமாவும், குர்தாவும் அணிந்து புது வியாஸாக இருந்தார்.

"கம்... கம்" என்றார். "உன் வரவால் இந்த வீடு இன்றைக்கு பாக்கியம் பெற்றது. என் அருமையான காரியதரிசி மனமிரங்கி இன்று என் வீட்டிற்கு விஜயம் செய்ய ஒத்துக்கொண்டு வருகை புரிந்துவிட்டாள்" என்றார் வேடிக்கையாக.

"கேலி வேண்டாம்" என்று நான் மரியாதையுடன் வீட்டில் நுழைந்தேன். வீடு முழுக்க கிரானைட்டில் இழைத்திருந்தது. இது வரவேற்பறை, இது பூஜையறை, இது படுக்கையறை என்று ஒவ்வொன்றாய் அறிமுகப்படுத்திக்கொண்டே வந்த மாதிரி, 'இது மனைவி' என்று அவர் தன் மனைவியை எனக்குப் பரிச்சயம் செய்துவைத்தார்.

அவர் மனைவி அவரைவிட வயதானவளாகத் தோன்றினாள். நரையும், திரையும். உடலில் தங்கம், ஆடையில் பட்டு என்று ஜொலித்தாலும் அவள் முகத்தில் வாட்டம் இருந்தது.

என்னுடன் சம்பிரதாயமாக இரண்டு வார்த்தைகள் பேசுவதற்குள் மூச்சிரைத்தாள். போய்விட்டாள்.

சிற்றுண்டியை வேலைக்காரர்கள் பரிமாறினார்கள். எனக்குப் பக்கத்தில் நின்று வியாஸ் உபசரித்தார். நட்சத்திர ஓட்டலில் சாப்பிடும் அதே தரத்தில் சிற்றுண்டி.

உணவு வகைகள் கூட நட்சத்திர ஓட்டல் ரகம்தான். ஒன்பது வகை ஐட்டங்கள், ஸ்வீட், மில்க் ஷேக், பிரெட் ஆம்லெட், பாலாடைக்கட்டி, நெய்யில் புரண்ட இட்லி, நான்கு வகை சட்னி.

இட்லி எனக்கு பிரியம் என்பதால் இட்லி செய்யச் சொன்னதாகக்

கூறினார்.

நான் புறப்படும்போது அவரைக் கேட்டேன்.

“எல்லோரையும் அறிமுகப்படுத்தினீர்கள். உங்கள் குழந்தைகளை யாரையும் அறிமுகப்படுத்தவில்லையே?”

“இருந்தால்தானே அறிமுகப்படுத்த” என்றார் சட்டென்று.

“அப்படியானால்?”

“அப்படித்தான்.”

என்னை காரில் ஏற்றி அனுப்பினார் வியாஸ். வழி முழுக்க அவர் வாழ்க்கையின் சோகம் என் மேல் கவிழ்ந்திருந்தது. பணம், தோட்டம், வீடு, கார், உடை, உணவு எல்லாம் இருந்தும் கூட குழந்தையில்லை.

அடுத்த நாள் நான் அவர் கடிதத்தை ‘டிக்டேட்’ பண்ணும்போது குறிப்பு எடுத்துக்கொண்டே, “ஏன் குழந்தை இல்லை?” என்று கேட்டேன்.

அடிப்பார்வையில் அவரைப் பார்த்தேன்.

கடிதத்தை ‘டிக்டேட்’ பண்ணுவது நின்றுவிட்டது. அவர் என்னை நிமிர்ந்து பார்த்தார்.

“அவளுக்கு உடம்பு சரியில்லை. ஆஸ்துமா. இதய நோய். பணம், வியாதியையும் சேர்த்தே தருகிறது. யூ.ஸீ ” என்றார்.

எனக்கு ஏன் கேட்டோம் என்றாகிவிட்டது.

அடுத்த தடவை நாங்கள் மைசூருக்கு போனோம். மைசூரில் ஒரு ‘பார்ட்டி’யை சந்திக்க வேண்டியிருந்தது. ‘பார்ட்டி’ லலித மஹாலில் அறைகள் ‘புக்’ பண்ணியிருந்தார்.

ஒரு மலைப்பாதையில் கார் வளைந்து சென்று, ஒரு காலத்தில் அரண்மனையாக இருந்து, இன்றைக்கு ஓட்டலாக மாறியிருக்கும். லலித மஹாலின் போர்டிகோவில் நுழைந்து நின்றது. அது ஒரு நவம்பர் மாதம்.



காலையில் குளிர் மறையாத மைசூரின் வசந்த காலம். மழையில்லை. மரங்கள் பசேலென்று ஜொலித்தன. பூக்கள் பூப்பெய்திய மகிழ்ச்சியில் சிரித்தன.

எனக்கான அறை மிக அற்புதமாக இருந்தது. திரையை விலக்கினால் பனிப்போர்வை போர்த்துக்கொண்டிருந்த மைசூர் தெரிந்தது. ரேஸ் கோர்ஸில் ஒரு ஜாக்கி அதன் குதிரையுடன் தனியாக ஓட்டம் பயின்று கொண்டிருந்தான். மலைப் பாதையில் ஒரு கார் மேலே ஏறி வருவதும், ஒரு சுற்றுலா பஸ் கீழே இறங்கிப் போவதும் என்னவோ இயற்கை சித்திரம் வரைந்து மாட்டிய மாதிரி தெரிந்தது.

நான் அன்றைக்குக் காலை முழுவதும் வியாசுடன் தொழில் விஷயமாகச் சுற்றினேன். முன் மாலையில் ஒரு சந்தனத் தைலம் தயாரிக்கும் கம்பெனிக்குப் போய் உடம்பெல்லாம் சந்தனம் மணக்கத் திரும்பினேன்.

அறைக்கு வரும்போது மணி எட்டு. வெந்நீரை எனக்கு வேண்டிய சூட்டில் வைத்துக் குளித்த பின்னரும், உடம்பில் சந்தன வாசனை நீங்கவில்லை.

ஆடை மாற்றி, ஹீட்டரில் தலை காய வைத்துக் கொண்டிருந்தபோது கதவு தட்டப்பட்டது. நாசூக்கான தட்டல். ‘பேரர்’ என்றால் சிக்கனமாக பஸ்ஸரை உபயோகித்து அழைப்பான்.

நான் கதவு திறந்தேன். வியாஸ் வெளியே நின்றிருந்தார்.

“வாருங்கள்” என்றேன்.

அவர் உள்ளே வந்தார்.

“இன்றைக்கு இரவு உன்னுடன் சாப்பிடலாமா... உஷா?” என்று கேட்டார்.

“நீங்கள் எப்படி விரும்பினாலும் சரி” என்றேன்.

அவர் சோபாவில் உட்கார்ந்தார். என்னையும் உட்காரச்





சொன்னார். ரூம் சர்வீசில் விஸ்கியும், ஜின்னும் ‘ஆர்டர்’ பண்ணினார். எனக்கும், அவருக்கும் பிடித்த உணவு வரவழைத்தார்.

ஜின் கோப்பையை எனக்கு நீட்டினார்.

“சார்.”

“குடி. இது ‘லேடீஸ் டிரிங்க்’. ஒன்றும் பண்ணாது” என்றார்.

அவர் விஸ்கி குடித்தார். நான் கோப்பையை உதட்டருகே வைத்தேன். ஒரு மாதிரி ‘ஸ்வீட் ஸ்மெல்’ வந்தது. ‘கிரைப் வாட்டர்’ வாசனை. லெமன் கார்டியல் வாடை. ஒரே ஒரு முறை சிப்பினேன். ஒரு துளி கசப்பில்லை. மாறாக இனிப்பாக இருந்தது. சின்ன வயதில் ‘கிரைப் வாட்டர்’ என்றால் பாட்டில் பாட்டிலாகக் குடித்தவள் என்று அம்மா சொல்லுவாள். ஒரு வேளை அதனாலேயே எனக்கு ஜின்னின் வாசனை பிடித்ததோ என்னவோ?

நான் குடித்தேன். ஒரு மாதிரி மிதக்கிற உணர்வு. பூமியில் கால் பாவாமல் வானத்தில் உலவும் ஒரு தேவதை போல உணர்ந்தேன். இந்த நேரம் சொர்க்கம். இதை எந்த நாளும் இழக்கக் கூடாது என்ற உணர்வை அடைந்தேன்.

“உஷாமதி.”

“சார்.”

“சார் என்று கூப்பிடாதே. வியாஸ் என்று கூப்பிடு.”

“வியாஸ்.”

“தட்ஸ் பெட்டர். நீ தப்பாக எடுத்துக்கொள்ளாவிட்டால்... நான் ஒன்று சொல்லட்டுமா?”

“ம்.”

“எனக்கு நீ வேண்டும்.”

நான் வியாஸை என் ஆதர்ச ஆணாக நினைத்திருந்த காலம் அது. என் தெய்வமாக மதித்திருந்த நாட்கள் அவை. என்

தெய்வமே என்னிடம் வரம் வேண்டி நிற்கிறது. இதைவிட வேறு என்ன வேண்டும்?

அப்பாவா, அம்மாவா... என்னை கட்டுப்படுத்த யார்? எனக்கு மணமுடிக்க யார்? என்னை இனிமேல் எந்த இளவரசன் வந்து அள்ளிக்கொண்டு போகப் போகிறான்? என் சக்கரவர்த்தி இதோ அழைக்கிறார். கடலில் மெத்தையிட்டு, அலையில் தாலாட்டி ஆனந்தமூட்ட என்னைத் தேடி வந்திருக்கிறார்.

“எடுத்துக்கொள்ளுங்கள் வியாஸ்” என்றேன்.

அது மிக இயல்பாக நடந்தது. ஒரு பூ மலர்வதே தெரியாமல் மலர்கிற மாதிரி, ஒரு சிலந்தி வலை பின்னுவதே தெரியாமல் வலை பின்னி முடிக்கிற மாதிரி அந்த விஷயம் நடந்து முடிந்துவிட்டது.

நான் வருத்தப்படவில்லை.

வியாசும் வருத்தப்படவில்லை.

டெல்லிக்குத் திரும்பினோம். ஒரு டைரக்டர், அவரின் தனிச் செயலர் என்ற முறையில்தான் நடந்துகொண்டோம்.

அதற்குப் பிறகு இரண்டு, மூன்று ஊர்களில்– இரண்டு, மூன்று இடங்களில் நான் அவருக்கு முழுக்க முழுக்கச் சொந்தமாக இருந்தேன். ஒரு ‘ஜீரோ’ நிலையில் இருந்த நான் பிளாட்டும், வசதியுமாக இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறேன் எனில், அது வியாசால்தான். வியாசுக்கு நான் கடமைப்பட்டவள். நன்றி செலுத்த தவறக்கூடாதவள். சந்தர்ப்பம் கிடைத்தால் பயன்படுத்தி நன்றி செலுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தவள்.

ஒரு நன்றி செலுத்துதல்தான் அது. இப்படிச் சொல்கிறேன் என்பதற்காக நான் வெறும் இயந்திரமாக நடந்துகொண்டு விடவில்லை. நான் பெண். உணர்ச்சிகளால் சூடாக்கப்பட்ட உடல் கொண்டவள். உடலின் ஒவ்வொரு அணுவும் எங்கே எங்கே என்று ஏங்கும் பருவத்தில் இருந்தவள். சரியாக மன முதிர்ச்சி பெறாதவள். அதனாலேயே வியாசை அரசாளும் உரிமை



கிடைத்ததற்காக மனதில் ஒரு ‘ஈகோ’ திருப்தி கொண்டவள்.

ஒருமுறை நாள் தவறிவிட்டது. எவ்வளவோ ஜாக்கிரதையாக இருந்தும் எப்படி அது நிகழ்ந்தது என்று தெரியவில்லை. விரல் விட்டு கணக்குப் போட்டேன். சென்ற மாதம் எப்போது ‘சானிடரி டவல்’ வாங்கினேன் என்று காலண்டரைப் பார்த்தேன். எப்படிப் பார்த்தாலும் நாள் தவறியது தவறியதுதான்.

வியாசிடம் சொன்னேன்.

“நிஜமாகவா?” என்று சந்தோஷப்பட்டார்.

“வேண்டாம் வியாஸ். நான் கலைத்துவிடுகிறேன்” என்றேன்.

வியாஸ் என் கைகளைப் பற்றிக்கொண்டார். “தயவு செய்து அதை மட்டும் செய்துவிடாதே. நான் என் வாரிசைப் பார்க்க ஆசைப்படுகிறேன். உன்னை தங்கத்தால் அபிஷேகம் செய்கிறேன் மதி. மெத்தையில் இட்டு சீராட்ட வைக்கிறேன். வேண்டாம். இந்த எண்ணத்தை மட்டும் மாற்றிக்கொள்” என்றார்.

சம்மதித்தேன். நான் டெல்லியிலேயே இருந்தால் என் குட்டு வெளிப்பட்டுவிடும். அங்கே இருந்து அவமானப்பட முடியாது. என்ன செய்வது என்று யோசித்தேன். வியாசைவிட்டு விலகிவிடத் தீர்மானித்தேன். சொன்னேன்.

வியாஸ் துடித்துப் போனார்.

“இல்ல மதி. நீ போனால் என் வாழ்க்கை போய்விடும். என் நிம்மதி போய்விடும். நீ இங்கேயே இருந்துவிடு.”

“எப்படி? உங்கள் வை......?”

“மதி...”

“உங்கள் வைப்பாட்டியாக இருக்கச் சொல்கிறீர்களா வியாஸ். விஷயம் வெளியே தெரியாமல் இருக்காது.”

“நான் உன்னைக் கல்யாணம் செய்துவிடுகிறேன் மதி.”

தேன் போன்ற வார்த்தைகள். இருந்தும் நடக்காது.

"வேண்டாம் வியாஸ்" என்றேன்.

வியாஸ் என் தோளைப் பற்றினார்.

"ஏன் வேண்டாம்?"

"என்னால் ஒரு தேன் கூட்டைக் கலைக்க முடியாது. உங்கள் மனைவி என்னை சாபமிட்டே அழித்துவிடுவாள். அவள் ஒப்பமாட்டாள். தனது சாம்ராஜ்ஜியத்தில் என்னை அனுமதிக்க மாட்டாள்"

"அவள் நோயாளி. வயதானவள். குழந்தை பெற்றுக்கொடுக்கத் தகுதியற்றவள்."

"அதனால்தான் சொல்கிறேன். அவள் உக்கிரம் இன்னும் அதிகமாகிவிடும்."

"அப்படியானால் வேறு என்ன வழி?"

"என்னை மனைவியாய் ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், நீங்கள் உங்கள் மனைவியிடம் இருந்து விவாகரத்து பெற வேண்டும். அது முடியாத விஷயம். எனவே நாம் காத்திருப்போம்."

"எதுவரை மதி?"

"உங்கள் மனைவி சாகிற வரைக்கும்."

என் மனநிலையில் யார் இருந்திருந்தாலும் அப்படித்தான் பேசி இருப்பார்கள். நான் அப்படி கடுமையாகப் பேசிய பின்னர் வியாஸ் என்னிடம் வேறு பேச்சே பேசவில்லை. தலையை வெறுமனே ஆட்டினார்.

டெல்லியின் புறநகர்ப் பகுதியில் எனக்கென்று ஒரு தனி ஏற்பாடு செய்துகொடுத்தார். என்னைப் பார்த்துக்கொள்ள ஒரு செவிட்டு வேலைக்காரியை அமர்த்தினார்.

பக்கத்திலேயே பிரசவ ஆஸ்பத்திரி.

பத்தாம் மாதம் சுதாமதி பிறந்தாள். நர்ஸ் என் குழந்தையை குளிப்பாட்டி, குழந்தையின் முகத்தை எனக்குக் காட்டியபோது, 'இந்தக் குழந்தையையா நான் கொல்ல நினைத்தேன்?' என்று





தோன்றியது.

அழுதேன்.

சுதாமதி அவ்வளவு அழகாக இருந்தாள். அவள் கண்களை மட்டும் வியாசிடமிருந்து பெற்று வந்திருந்தாள்.

வியாஸ் குழந்தையை வந்து பார்த்தார். அணைத்தார். உச்சி மோந்தார்.

"இது என்னுடைய சொத்து. என்னுடைய வாரிசு" என்றார்.

நான் மவுனமாக இருந்தேன். குழந்தை கையில் வந்த பிறகு வியாஸ் அந்நியமாகிப் போய்விட்ட மாதிரி உணர்ந்தேன்.

"குழந்தைக்கு என்ன பெயர் வைக்கப் போகிறாய் மதி?"

"சுதாமதி" என்றேன்.

"எப்படி இந்தப் பெயரை தேர்வு செய்தாய்?"

"ஜஸ்ட் லைக் தட். பிடித்திருக்கிறதா?"

"நீ செய்யும் எதுவும் எனக்குப் பிடிக்கும்".

"வியாஸ்."

"என்னம்மா?"

"நான் வேறு ஊரில் போய் 'செட்டிலாகி' விடப்போகிறேன். நான் இங்கே இருந்தால், நீங்கள் இங்கே அடிக்கடி வரப் போக இருப்பீர்கள். அதுவே உங்களைக் காட்டிக் கொடுத்துவிடும்."

"உன் இஷ்டம். ஆனால் ஒரு விஷயம். என்றைக்கு இருந்தாலும் சுதாமதி எனக்குரியவள்."

"சரி" என்றேன்.

சென்னையில் குடியேறுவது என்று தீர்மானித்தேன். கம்பெனியில் என் கூட வேலை செய்த விமலா இப்போது சென்னையில் இருந்தாள். அவள் என்னைப் பற்றி எதுவும் தெரியாதவள். அவளுக்கு கடிதம் எழுதி, சென்னையில் எனக்கொரு 'பிளாட்'டை வாடகைக்கு பிடிக்குமாறு கேட்டுக்கொண்டேன்.

அவள் 'பிளாட்' ஏற்பாடு செய்தாள். ஒரு அநாதை இல்லத்தில் இருந்த நாராயணியை எனக்குத் துணையாக ஏற்பாடு செய்து கொடுத்தாள்.

நான் எனக்காக ஒரு இறந்த காலத்தைத் தயார் செய்துகொண்டேன். டெல்லி கடையில் ஒரு தாலி வாங்கி எனக்கு நானே கட்டிக்கொண்டேன். என் கணவர் பெயர் சுதர்சன் என்று தீர்மானித்தேன். அவன் ஒரு சாலை விபத்தில் இறந்து போனான் என்று புதுக்கதை எழுதினேன். அவன் சாகும்போது சுதாமதி என் வயிற்றில் மூன்று மாதம் என்று கதையில் ஒரு சுவையான திருப்பம் சேர்த்தேன். என் கணவன் நினைவாக சுதர்சனில் சுதாவையும், உஷாமதியில் மதியையும் சேர்த்து குழந்தைக்கு சுதாமதி என்று பெயர் சூட்டி இருக்கிறேன் என்று கதைக்கு அழகு சேர்த்தேன்.

ஒரு இளம் விதவை. கையில் மூன்று மாதக் குழந்தையுடன் சென்னையில் ஏகப்பட்ட அனுதாபம் சம்பாதித்தாள். நான் கல்யாணம்ஆகாமலேயே குழந்தை பெற்றவள் என்றால், என்னை எப்படி வரவேற்று இருப்பார்கள்? என்னை எப்படி எல்லாம் பார்த்திருப்பார்கள்?

சென்னையில் வேலை கிடைத்துவிட்டது. சுதாமதி மெல்ல வளர்ந்தாள். நாராயணிக்குக்கூட இந்த ரகசியம் தெரியாது. அவள் கூட நான் விதவை என்று நம்பிக்கொண்டிருக்கிறாள். அவளைப் போலவே ஓர் அநாதை என்று நினைத்துக்கொண்டிருக்கிறாள். இருக்கிற அம்மாவையும், அண்ணனையும் விட்டு– நான் தாலியின்றிக் குழந்தை பெற்று இங்கே வந்திருப்பவள் என்பதை உணர்ந்தால் என்னை எவ்வளவு கேவலமாகப் பார்ப்பாள்?

என் இருப்பிடத்தை வியாசிற்குத் தெரிவித்தேன். என்ன ருந்தாலும் ஒருநாள் இல்லாவிட்டால், ஒரு நாள் வசந்த் விஹார் ளிகையில் நுழையப் போகிறவள் என்ற நம்பிக்கையில். சுதாமதியை வளர்ப்பதற்கென்று வியாஸ் இப்போதும்



மாதா மாதம் 'செக்' அனுப்புகிறார். பெரிய தொகை. நான் அதை தொடவில்லை. சுதாமதியின் பெயரிலேயே போட்டு வைத்துக்கொண்டிருக்கிறேன்.

இவ்வளவு நாட்கள் கழித்து– உண்மையான காதல் என்றால் என்ன என்று எனக்கு இப்போது திவாகர் மூலம் தெரிந்திருக்கிறது. வியாசிடம் நான் என்னை இழந்தது ஒரு பலவீனமான தருணத்தில். அப்போது மனமுதிர்ச்சி அற்றவள். வியாசை தெய்வமாக மதித்தவள். ஆனால், வியாஸ் என்னை ரத்தமும், சதையும் கொண்ட பெண் உடலாகத்தான் பார்த்திருக்கிறார் என்று இப்போதுதான் உணர்கிறேன்.

இன்றைக்கு நான் எப்படி திவாகரைக் கல்யாணம் செய்ய முடியும்? எவ்வளவு பொய்கள் என்னைச் சுற்றிப் பின்னி இருக்கின்றன? இவ்வளவு பொய்களையும் உடைத்தால் திவாகர் என்னைப்பற்றி என்ன நினைப்பான்? நான் உண்மைகளைச் சொல்லி திவாகரை ஒரேயடியாக இழப்பதைவிட, பொய்களுடனேயே திவாகர் என் அருகில் இருப்பதை விரும்புகிறேன் என்று நான் எப்படி அவனுக்குச் சொல்வது?

என்னை இந்த மாதிரி தனிமைத் தீயில் வெந்து போகுமாறு விட்ட வியாஸ் இந்நேரம் எப்படி இருக்கிறார்?

## 6

**நா**ன் கண்ணாடி முன்பாகப் போய் நின்றேன். என்னையே ஒரு முறை பார்த்துக்கொண்டேன். எப்படி இருந்தவன்? நாற்பத்து மூன்று வயது என்று நான் சொல்லியபோது நம்பாதவர்கள், சும்மாவே வயதை உயர்த்திச் சொல்கிறேன் என்று கேலி செய்தவர்கள், இன்று நாற்பத்தேழு வயது என்று சொன்னாலும் நம்பப் போவதில்லை. 'கிழவன் வேண்டுமென்றே வயதைக் குறைத்துச் சொல்கிறான்' என்பார்கள். இந்த வயதில்

இவனுக்கென்ன பவுசு வேண்டிக் கிடக்கிறது என்பார்கள்.

என் கன்னங்களில் ஒரு கைப்பிடி அரிசி போடலாம் போல குழி விழுந்திருக்கிறது. எந்தக் கேசம் நரையின்றி இருக்கிறது என்று நான் பெருமிதப்பட்டேனோ அந்தக் கேசம் இப்போது வெள்ளிக் கம்பிகளாய் மாறியிருக்கிறது. நெற்றியில் சுருக்கங்கள்.

எல்லாம் அவளால். உஷாமதியால்.

நானே அவளை உருவாக்கியவன். நானே அவளை ஆள நினைத்ததில் என்ன தப்பு? என்னிடம் வேலை கேட்டு வந்தபோது, அவள் ரவிக்கையில் கிழிசல் இருந்ததை அவளால் மறைக்க முயன்றும் மறைக்க முடியவில்லை. அப்போதே அந்த உடலின் மீது ஆசை வைத்தவன் நான். அடுத்த வேளைச் சோற்றுக்கு வழி அறியாமல் இருந்தவள்தானே அவள். காயம்பட்டு செத்துப் போகும் நிலையில் இருந்த மான்தானே அவள். அவளுக்கு என் கையால் ஜீவ அமுதம் ஊட்டி, அவளுக்கு உயிர் கொடுத்து, துளிர்விடச் செய்து, தளதளவென்று மாற்றியவன் நான்.

எனக்கு வீட்டில் நரகம். மனைவிக்கு பெயர்தான் பரிமளா. கிட்டே நெருங்க முடியாது. சாப்பிடும் ஏகப்பட்ட மருந்துகளாலோ, இழுப்பு வியாதியாலோ என்னவோ ஒரு வீச்சம் இருந்துகொண்டே இருக்கும். மலட்டுக் கிழவி. அவள் தகப்பன் பணக்காரன் என்றால் நான் அவளுக்கு அடிமையாகிவிட முடியுமா? என்னைச் சங்கிலி போட்டுக் கட்டாத குறை.

வெளியே போனால்– எங்கே போகிறாய்? தாமதமாகத் திரும்பி வந்தால்... ஏன் தாமதம்? வெளியூருக்கு வேலை விஷயமாகப் போனால், எவளுடன் சல்லாபித்துவிட்டு வருகிறாய்? எவ்வளவு கேள்விகள். வீட்டில் இருக்கவே விடாமல் துரத்தி துரத்தி அடித்த சந்தேகக் கேள்விகள்.

ஒரே ஒருநாள் உஷாமதி வீட்டுக்கு வந்து போய்விட்டாள் என்பதற்காக அவளையும், என்னையும் இணைத்து எப்படி எப்படியெல்லாம் பேசினாள் இந்தப் பாதகி. அதற்காகவே



அவளைப் பழிவாங்க வேண்டும் போல் தோன்றிவிட்டது. உஷாமதி சொன்னது உண்மைதான். இந்த அரக்கி வீட்டில் இருக்கும் வரை அந்தத் தேவதையை இந்த வீட்டில் என்னால் கொண்டு வந்து சேர்க்க முடியாது.

நீ மிகச் சரியாகச் சொன்னாய் என் மாயாதேவி. என்ன சொன்னாய்? உங்கள் மனைவி சாகிற வரைக்கும் காத்திருக்க வேண்டும் என்றுதானே சொன்னாய். அவள் உயிரோடு இருக்கிறவரை உன்னையும், என்னையும் இணைத்துச் சந்தேகப்பட்டது உண்மையென்று அவளுக்குத் தெரிந்துவிட்டால், அவள் உன்னை உயிரோடு விட்டு வைக்கமாட்டாள். எப்படியாவது உன்னைக் கொன்று போடுவாள். நீ அவளிடம் சிக்கினால், நாயிடம் சிக்கிய தேங்காய் ஆகிவிடுவாய்.

இருந்தாலும் உஷாமதி... உனக்கு இவ்வளவு ஆங்காரம் கூடாது. மாயையிடம் கசியபன் மயங்கிய மாதிரி நான் உன்னிடம் மயங்கினது உனக்கு மறந்துவிட்டதே மதி.

கசியபனிடம் மாயை சாமத்திற்கு ஒரு உரு எடுத்துக் கூடினாற் போல நீ என்னுடன் கூடினாயே. என்னால் அந்த நாட்களை மறக்க முடியுமா? எனக்கு நீ தாயாக, சேயாக, தோழியாக இருந்தாயே. அத்தனையும் உதறிவிட்டுப் போய்விடுவது என்று தானே தீர்மானித்துப் போய்விட்டாய்!

என் கண்ணே, உன்னைப் பிரிந்து இரண்டரை ஆண்டுகளில் நான் எப்படி உருக்குலைந்து இருக்கிறேன் என்பது தெரிந்தால் நீ எவ்வளவு கவலைப்பட்டுப் போவாய் தெரியுமா?

சுதாமதி இப்போது இரண்டரை வயதுப் பெண்ணாகி இருப்பாள். என் வாரிசு. என் கண்களுடன் உன் ஜீவனில் கலந்து பிறந்தவள். என்னவள். அவள் ஒரு ராஜகுமாரி போல் வளர வேண்டும். ஒரு சிண்டரெல்லா போல் தேவதைகள் தாங்கி வாழ வேண்டும். அவளுக்கு உலகத்தின் எல்லா 'தி பெஸ்ட்'களும் கிடைக்க வேண்டும்.

மதி. நீயும், நானும் இனி ஒன்றாகவே வாழக்கூடாது என்று நினைத்துதானே, அப்படி ஒரு வாக்கியத்தை உன் தேனூறும் உதடுகளால் உதிர்த்துவிட்டுப் பிரிந்து போனாய்?

'உங்கள் மனைவி சாகிற வரைக்கும்.'

என் மனைவிக்கு ஆஸ்துமா. ஆஸ்துமா என்றாலே நித்தியகண்டம் பூரண ஆயுசு. அவள் சாகமாட்டாள் என்று நம்பித்தானே அப்படி சொல்லிவிட்டுப் போனாய்.

நீ நினைத்தது தப்பு. நான் உன்னைப் பிரிந்து, கடைசி வரை இந்த நரகத்திலேயே உழன்றுகொண்டிருப்பேன் என்று எதிர்பார்த்தாயா?

நான் இந்த இரண்டரை வருடங்களில் சில முக்கியமான தினங்களை மட்டும் உனக்காக ஒரு முறை நினைவுபடுத்திக் காட்டட்டுமா?

உனக்கு இப்போது கேட்காமல் போகலாம். ஆனால், உன்னைச் சந்திப்பேன். கூடிய விரைவில் சந்திக்கத்தான் போகிறேன். உன்னையும், சுதாமதியையும் ஒரு தங்கக் கயிற்றில் பிணைத்து இழுத்து வரத்தான் போகிறேன். அப்போது எப்படியும் உன்னிடம் சொல்வேன். இப்போது ஒரு தடவை நினைத்துப் பார்த்தால் தப்பில்லை.

### காட்சி ஒன்று

டெல்லியில் இருக்கும் ஒரு பெரிய புத்தகக் கடை. உள்ளே நுழைகிறேன். ஒவ்வொரு துறையாகப் பார்வையிட்டுக்கொண்டே வந்து கடைசியில் மருத்துவப் பகுதியில் நிற்கிறேன். மெதுவாக ஒவ்வொரு புத்தகமாக எடுத்துப் பார்க்கிறேன். 'ஸ்லோ பாய்சன்ஸ்'. அதைக் காசு கொடுத்து வாங்குகிறேன். 'பில்' போடும்போது தப்பான பெயர் சொல்கிறேன். தப்பான முகவரி சொல்கிறேன்.

புத்தகத்தை என் அலுவலக அறையில் ரகசியமாகப்



படிக்கிறேன்.

'ஆர்செனிக்' எனும் மெதுவாகக் கொல்லும் நஞ்சு பற்றி மிக விஸ்தாரமாகத் தெரிந்துகொள்கிறேன். அந்த நஞ்சை எந்தெந்த மருந்தில் கலக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்கிறேன். புத்தகத்தை எரிக்கிறேன்.

### காட்சி இரண்டு

ஒரு டாக்டரின் ஆலோசனை அறைக்கு வெளிப்புறம். டாக்டர் புறநகரில் இருப்பவர். அதிக நோயாளிகளை அடையாதவர். அதனால் சம்பாதிக்க முடியாதவர். சட்டத்திற்கு ஒவ்வாத சில கலைப்புகளைப் பண்ணுபவர்.

நான் அவர் அறை வாசலில் உருமாறி உட்கார்ந்திருக்கிறேன். ஒரு ராஜஸ்தான் விவசாயி போல முகத்தைப் பெரும்பாலும் மறைத்த தலைப்பாகை, தொளதொள வெள்ளைச் சட்டை. டாக்டர் என்னை கோட்- சூட்டில் என் ஏ.சி. காரில் பிற்பாடு எப்போது பார்த்தாலும் கிஞ்சித்தும் சந்தேகப்பட மாட்டார் என்பதை புரிந்து வைத்திருக்கிறேன்.

டாக்டர் அழைக்கிறார். உள்ளே போகிறேன். உடல் இளைக்க மருந்து கேட்கிறேன். நான் ஒரு ஜெய்ப்பூர் தாக்குர் என்று என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். உடலை 'ஸ்லிம்'மாக்கும் மாத்திரைகளில் ஒரு குறிப்பிட்ட மாத்திரையில் மிகக் குறைந்த அளவில் 'ஆர்செனிக்' கலக்கப்படுவது எனக்குத் தெரியும்.

டாக்டர் மருந்து எழுதித் தருகிறார். அவர் சந்தோஷப்படுகிற அளவு பணம் கொடுக்கிறேன். முதல் மருந்து சீட்டில் நான் எதிர்பார்த்த மருந்தின் பெயர் இல்லை. அதனால் என்ன? எதிர்பார்த்ததுதான்!

இரண்டாம் தடவை, மூன்றாம் தடவை, நான்காம் தடவை என்று நான்கு முறை அவர் 'கிளினிக்'கிற்குப் போகிறேன். முன்பைவிட நல்ல மாத்திரை என்று கேட்கிறேன். நான்காவது

முறை மருந்து சீட்டில் நான் எதிர்பார்த்த மாத்திரையின் பெயர் எழுதப்பட்டுவிட்டது.

அதுதானே நான் எதிர்பார்த்தது. டெல்லியில் எவ்வளவு மருந்துக் கடைகள். ஒவ்வொரு கடையிலும் மருந்து சீட்டை காட்டிக் காட்டி மாத்திரைகள் வாங்குகிறேன்.

கடைக்காரர்கள் யாரும் சந்தேகப்படுவதில்லை. அவர்கள் ஏன் சந்தேகப்படப் போகிறார்கள்?

பாட்டில்களில் இருந்து மாத்திரைகளை எடுத்து என் சூட்கேசில் ஒரு 'பிளாஸ்டிக்' உறையில் போட்டு வைக்கிறேன்.

இந்த மாத்திரைகள்.

மெதுவாகக் கொல்லும் நஞ்சை உள்ளடக்கியவை. இந்த மாத்திரைகளை உண்டு யார் இறந்தாலும், பிரேத பரிசோதனையில் கூட எதனால் சாவு என்று கண்டுபிடிக்க முடியாத அளவு மிகத் திறமையாக வேலை செய்பவை.

### காட்சி மூன்று

ஒவ்வொரு நாளும் இரவு படுக்கையறைக்குச் சென்று, பரிமளாவைப் பார்த்து ஒரு வார்த்தை, இரு வார்த்தைகளுடன் என் உரையாடலை முடித்துக்கொள்வது பழக்கம்.

இப்போதும் போகிறேன். ஒரு வார்த்தை, இரு வார்த்தை என்பது மூன்று, நான்கு வார்த்தைகளாக நீள்கிறது.

அவளுக்காக என்று வேலைக்காரன் வைத்திருக்கும் பாலில் அவள் அறியாமல் ஒரு நாளைக்கு மூன்று, மூன்று மாத்திரைகள் என்று கலக்குகிறேன்.

அவள் படுக்கையில் இருக்கும் ஒரு லீவரை அழுத்தினால் அது அப்படியே நிமிரும். அவளைச் சாய்ந்த வாக்கில் 'ஈஸி சேர்' கோணத்தில் உட்கார வைக்கலாம். பணம் சம்பாதித்துத் தந்த வசதி அது.

லீவரை அழுத்தி பரிமளாவை சாய் கோணத்தில் உட்கார



“நான் ரஜினி ரசிகர்னு எப்படி சார் கண்டுபிடிச்சீங்க?”

“நீ ஓட்டுற கார் அதிருதில்ல!”

– கே. ராமச்சந்திரன், சென்னை.





“உங்களுக்கு கல்யாணம் ஆகிட்டதா பேசிக்கிறாங்களே?”

“என் மகள் மீது சத்தியமா சொல்றேன், இன்னும் எனக்கு கல்யாணம் ஆகலை!”

– சீர்காழி ரேவதி.

“வேலை எதுவும் கிடைக்கலை. பேசாம அப்பாவுக்கு துணையாக இருக்கலாம்னு நினைக்கிறேன்...”

“உங்க அப்பா என்ன பண்ணுறார்?”

“வீட்ல தாத்தாவுக்கு துணையா இருக்கார்!”

– உதய், சென்னை.



வைக்கிறேன்.

மாத்திரை கலந்த பாலை அவளுக்கு ஒரு நாள் நானே புகட்டுகிறேன். ஒரு நாள் அவளாகவே குடிக்கிறாள்.

நாட்கள் இப்படியே நகர்கின்றன.

அவ்வளவுதான் காட்சிகள்.

பரிமளாவிற்கு இப்போதெல்லாம் மூச்சு நிறைய இழுக்கிறது. கேங் கேஹேங்க் என்று கொல்லனின் துருத்திப்பைப் போல் சத்தம் எழுகிறது. மார்பின் எலும்புக்கூடு விம்மி விம்மித் தாழ்கிறது. அவள் இளைத்துப் போகிறாள். நான் உள்ளுக்குள் சந்தோஷப்படுகிறேன்.

டாக்டர் அவ்வப்போது வந்து பார்த்து மாத்திரைகளை மாற்றிக் கொடுக்கிறார். உடல்நிலை மோசமாகிக்கொண்டே போவதற்குக் காரணம் புரியாமல் திகைக்கிறார். நான் உள்ளுக்குள் ஆனந்தப்படுகிறேன். பரிமளா வாட, வாட என் மனதில் உஷாமதி மலர்ந்து மலர்ந்து சிரிக்கிறாள்.

உஷாமதிக்கும், சுதாமதிக்கும், எனக்கும் இடையில் இருக்கும் தூரம் குறைந்துகொண்டே வருகிறது. நான் கொஞ்சம் கொஞ் சமாக ஜெயித்துக்கொண்டே வருகிறேன்.

நான் கண்ணாடியைவிட்டு விலகினேன். என் முகம் கிழடு தட்டிப் போயிருப்பது ஒரு வகையில் நல்லதிற்குத்தான். படுக்கையில் உட்கார்ந்தேன். விஸ்கி குப்பியை எடுத்து தொண்டைக்குள் அப்படியே சரித்துக்கொண்டேன். தொண்டையை அறுத்துக்கொண்டே திரவம் உள் இறங்கியது.

இறங்கட்டும். இறங்கட்டும். என்னை என் மாயா சாப்பிட்டாள். அவளே சாப்பிட்ட பிறகு வேறு எது சாப்பிட்டால் என்ன?

கதவு தட்டப்படும் ஒலி கேட்டது.

“யெஸ்” என்றேன்.



கதவு திறந்தது. உள்ளே நுழைந்தவன் வேலைக்காரன். அவன் முகம் திகிலில் முழ்கி இருந்தது.

“என்ன?”

“மேம் ஸாப்?”

“எஜமானிக்கு என்ன?”

“செத்துப் போய்விட்டார்கள் சாப். மேம் சாப் நம்மையெல்லாம் ஏமாற்றிவிட்டுப் போய்விட்டார்கள் சாப்.”

“என்னது? பரிமளா செத்துப்போய்விட்டாளா?” என்று கேட்டேன்.

உள்ளத்தில் மத்தாப்பூ வண்ண வண்ண பூக்களைச் சொரிந்தது. காட்டாதே, உன் சந்தோஷத்தை வெளியில் காட்டாதே. தட்டுத்தடுமாறி எழுந்தேன். ஒரு முறை தரை பார்த்து அடிபடாதே என்று நிச்சயித்துக்கொண்டு விழுந்தேன். நல்ல நடிப்பு.

வேலைக்காரன் பதறிக்கொண்டு என்னருகில் வந்தான். என்னைத் தாங்கி நிறுத்தினான்.

“பரிமளா...” என்று கதறினேன், பரிதாபமாக.

எல்லாம் முடிந்துவிட்டது. பரிமளாவின் இறப்பை யாருமே சந்தேகிக்கவில்லை. கம்பெனியில் நடந்த இரங்கல் கூட்டத்தில் நான் ராமனாக வர்ணிக்கப்பட்டேன். பரிமளாவை நான் என் இமையைக் காட்டிலும் நல்லவிதமாக கவனித்து வந்ததாகக் கூறப்பட்டேன். பரிமளாவிற்கு அடுத்த பிறவி என்று ஒன்று இருக்குமானால், அதிலும் எனக்கு மனைவியாகவே அவள் அமைய வேண்டும் என்று இறைவனை வேண்டிக்கொண்டார்கள்.

பரிமளாவை போஸ்ட் மார்ட்டம், டெலிகிராம் மார்ட்டம் என்று எந்தத் தொந்தரவுமின்றி எரித்துவிட்டு வந்துவிட்டேன்.

இப்போது...

நான் ஒரு சுதந்திரப் பறவை. இனி சென்னை போய் உஷாமதியை

அழைத்துக்கொண்டு வரவேண்டும். அது ஒன்றுதான் பாக்கி. என் சுதாமதியை என் மடியில் போட்டு வளர்க்க வேண்டும்.

என் அலுவலக செயலரை அழைத்தேன். இப்போதைய செயலர் ஓர் ஆண். இயந்திரம் போல் கடமையைச் செய்பவன். சென்னையில் இருக்கும் நம் 'பார்ட்டி'யைப் பார்க்க வரப் போகிறேன் என்று போனில் செய்தி தெரிவிக்கச் சொன்னேன்.

சென்னைக்கு ஒரு 'டிக்கெட்' பதிவு செய்யச் சொன்னேன். ஆம்... விமானத்தில்தான்.

சென்னை.

நான் வந்தாகிவிட்டது.

உஷாமதி. தயாராய் இரு. என் மனைவி செத்துவிட்டாள். என்னைவிட்டு ஒரேயடியாக விலகிவிட்டாள்.

இனி என் வாழ்க்கையில் வசந்தம் வரவேண்டும்.

நான் உன்னை நாடி வரப்போகிறேன்.

தயாராய் இரு உஷாமதி. தயாராய் இரு.

## 7

அந்த ஓட்டலில் சந்தித்த நாளுக்குப் பின் ஏறக்குறைய இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன. திவாகரிடம் அவ்வளவு கடுமையாக ஏன் நடந்துகொண்டேன் என்று எனக்குள் நானே என்னைத் திட்டிக்கொள்ளத் தொடங்கினேன்.

மறுநாளில் இருந்து அவனைப் பார்த்தால் மறுபடி புன்னகையை வீசத் தொடங்கினேன்.

திவாகர் என்னை விட்டு விலகிவிட்டால் நான் சுக்கு நூறாகிப் போவேன். அவன் போய்விடக்கூடாது. என்னைவிட்டுப் போய்விடக் கூடாது.



என் சிரிப்பு அவனுக்கு மறுபடி தைரியம் அளித்தது. என்னுடன் மறுபடி பேசத் தொடங்கினான்.

அவனுடன் ஓட்டலுக்கு சுதா இல்லாமல் போகத் தொடங்கினேன். 'பைக்'ல் அவன் பின்னால் எவ்விதத் தயக்கமும் இன்றி உட்கார்ந்தேன். அவன் தோளைத் தொட்ட என் கை இப்போது அவன் இடுப்பைத் தொட்டது. பெண்களுக்கு இருக்கிற மாதிரி திவாகருக்கும் குறுகிய இடை.

அதைத் தொட்ட போதெல்லாம் எனக்கு 'ஷாக்' அடித்தது நான் சிலிர்த்துப் போனேன்.

ஒரு தடவை திவாகர் கேட்டான்.

"உஷா."

"ம்."

"உன்னால் மறக்க முடிந்துவிட்டதா?"

"எதை?"

"உன் கணவனை. அந்த விபத்தை."

நான் அவனைப் பார்த்துச் சிரித்தேன். "மறந்து கொண்டிருக்கிறேன்" என்றேன்.

"அப்படியானால்..."

"அப்படியானால்..."

"நான் இன்னும் எவ்வளவு நாள் காத்திருக்க வேண்டும்?"

"கல்யாணத்திற்கு அவ்வளவு அவசரமா திவு?"

"ஆம். சுதாமதியை நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டும். அவளுக்கு நல்ல படிப்பை தரவேண்டும்."

"அதற்கும், நம் கல்யாணத்திற்கும் என்ன சம்பந்தம்?"

"கல்யாணமாகிவிட்டால் நீ வேலையை விட்டுவிடலாம் வீட்டில் இருக்கலாம். சுதாவைக் கவனிக்கலாம். அவ்வப்போது என்னையும் கவனிக்கலாம். சுதாமதிக்கு நீ பாடம் சொல்லித்

தருவாயாம். நான் உங்களுக்கு இரை தேடி வருவேனாம்."

"ம்?"

"நான் சொன்னது தப்பா?"

"இல்லை."

"அப்படி என்றால் கல்யாணம்?"

நான் தீர்மானித்துவிட்டேன். இனிமேல் வியாஸ் என் வாழ்க்கையில் குறுக்கிடப் போவதில்லை. அவர் மனைவி இப்போதெல்லாம் சாகப் போவதில்லை. நான் விரும்பிய ஆணை மணந்து, அவன் ஆளுகைக்கு உட்பட்டு வாழ்வதில் என்ன தப்பிருக்க முடியும்?

என் பொய்கள் பொய்களாகவே இருக்கட்டும். நான் உண்மையைச் சொல்லி திவாகரைப் பறிகொடுக்கப் போவதில்லை.

"உங்கள் இஷ்டம்."

"நான் பார்க்கலாமா?" திவாகர் முகத்தில் துல்லியமாகத் தெரியும் சந்தோஷத்துடன் கேட்டான்.

"ம்" என்று வெட்கப்பட்டேன்.

"ஏய்."

"ம்."

"இந்த ஒரு விஷயத்திற்குச் சம்மதித்ததற்காக நான் உன்னை ஒரு இடத்திற்குக் கூட்டிப் போகப் போகிறேன்."

"எங்கே?"

"தியேட்டருக்கு. கூட்டமே இல்லாத ஒரு தியேட்டருக்கு. அதன் 'டாப் கிளாஸ் டிக்கெட்' வாங்கி கடைசி வரிசையை முழுக்க முன்பதிவு செய்யப் போகிறேன்."

"செய்து?" நான் உடலில் ஓடிய உல்லாசத்தை மறைக்க முடியாமல் கேட்டேன்.



"பாரேன்" என்றான்.

தியேட்டரில், திவாகர் எனக்கு முதல் முத்தம் கொடுத்தான். அது நான் தவமிருந்து பெற்றுக்கொண்ட மாதிரி இருந்தது. அதற்கு மேலே அவனும் போகவில்லை. கண்ணியத்தைக் காப்பாற்றிக் கொள்கிறாராம். மகாப் பிரபு. கல்யாணம் ஆன பின் இந்தக் கண்ணியம் எல்லாம் எங்கே போகிறது என்று நான் பார்க்கத் தானே போகிறேன்.

பதிவாளர் அலுவலகத்தில் நாள் குறித்து வந்துவிட்டான். சுதாமதி அவனை வீட்டுக்குள் ஏற்றுக்கொள்ள முழு மனதுடன் தயாராகிவிட்டாள்.

ஆபீசில் எங்கள் கல்யாணச் செய்தி பரவியது. வாழ்த்தினார்கள். திங்கட்கிழமை எப்போது வரப் போகிறது என்று நான் விநாடிக்கு விநாடி ஏங்கத் தொடங்கினேன்.

வெள்ளிக்கிழமை. இன்று கழிந்தால் நாளை, மறுநாள், அவ்வளவுதான். திவாகருடன் கல்யாணம். கல்யாணம் ஆகிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும். என் பொய்கள் நிரந்தரமாகப் பொய்களாகவே சமாதி அடைந்துவிடும்.

சென்னையை விட்டுப் போய்விட வேண்டும். வேறு ஊர். சின்ன ஊர். யாருக்கும் சொல்லாமல் தனியாக ஒரு புது வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும்.

திவாகர் ஒத்துக்கொள்வான் என்றுதான் தோன்றியது. கல்யாணம் ஆகட்டும்.

**நா**ன் 'டைப்பிங்'கை நிறுத்தினேன். காரணம் என் மேசையில் விடாமல் மணி அடித்த 'போன்'. எடுத்து "ஹலோ" என்றேன்.

"நான் வியாஸ்" என்று வியாசின் குரல் கேட்டது.

எனக்கு குப்பென்று வியர்த்துவிட்டது. வியாஸ் எங்கே இப்போது முளைத்தார். வெண்ணெய் திரண்டு வரும் நேரம்,

தாழி உடைந்த மாதிரி. இவர் எப்படித் திடீரென்று... இப்போது தோன்றினார்.

"எங்கிருந்து பேசுகிறீர்கள்?" என்று கேட்டேன். குரலின் நடுக்கத்தை மறைத்துக்கொள்ள நிறைய முயற்சி செய்ய வேண்டி இருந்தது.

"சென்னையில் இருந்து. சுதா எப்படி இருக்கிறாள்?"

"நல்லா இருக்கா"

"அவளை நான் பார்க்க வேண்டுமே? உன்னைப் பார்க்க வேண்டுமே? உன் 'பிளாட்'டிற்கு வரப் போகிறேன். எப்போது வரட்டும்? முக்கியமான விஷயங்கள் எல்லாம் பேச வேண்டும்."

வியாஸ் என் வீட்டுக்கு வருவதா? எல்லாமே 'அவுட்'!

"வேண்டாம் வியாஸ். நானே வந்து பார்க்கிறேன்" என்றேன்.

"எங்கே?"

"எங்கே தங்கி இருக்கிறீர்கள்?"

ஓட்டல் பெயரைச் சொன்னான்.

"அங்கேயே வருகிறேன். சேர்ந்து சாப்பிடலாம்."

"நீ எப்படி சொல்கிறாயோ அப்படி" என்று சொல்லிவிட்டு, போனில் ஒரு முத்தத்தை நழுவவிட்டு, தொடர்பை வெட்டினார் வியாஸ்.

"உனக்கு ரொம்ப வேண்டப்பட்டவரா உஷா. சாப்பாட்டுக்கெல்லாம் போகப் போவதாகச் சொல்கிறாய்?"

வெகு அருகில் திவாகரின் குரல் கேட்டுத் திடுக்கிட்டுப் பார்த்தேன். திவாகர் சிரித்துக்கொண்டு நின்றிருந்தான்.

"என் மாமா ஒருவர்... தூரத்து சொந்தம்."



"அப்படியா?" என்ற திவாகர் போய்விட்டான். நான் உறைந்து போய் உட்கார்ந்திருந்தேன்.

பிற்பகல் இடைவேளை. நான் ஓர் ஆட்டோவில், அந்த ஓட்டலில் போய் இறங்கினேன்.

'லவுஞ்'சில் நான் சுற்றிப் பார்த்தேன். வியாஸ் அங்கே இல்லை என்று நான் நினைத்துக்கொண்டிருந்த நேரத்தில் என்னைப் பார்த்து எழுந்து வந்தார் அவர்.

'கடவுளே... வியாசா? இவ்வளவு மாறிப் போயா?'

இந்த நான்கு ஆண்டுகளில் வியாஸ் மிகவும் மாறிப் போயிருந்தார்.

கன்னங்களில் குழி விழுந்து, தலைமுடி முழுக்க நரைத்து– நான் பார்த்து பிரமித்த ஆதர்ஷ புருஷன் இவர் இல்லை.

"ஹலோ உஷா."

"ஹலோ."

"போகலாமா? 'டேபிள் ரிசர்வ்' செய்திருக்கிறேன்."

போனேன்.

'இவர் என்னிடம் என்ன சொல்லப் போகிறார்? நான் அவரிடம் எப்படி விஷயத்தைப் போட்டு உடைக்கப் போகிறேன்?'

உணவுக்கான மேசையில் உட்கார்ந்தோம்.

"உனக்காக நான் என்ன பண்ணி இருக்கிறேன் என்று உனக்குத் தெரியாது உஷா" என்றார்.

"என்ன?"

"பரிமளாவைக் கொன்றுவிட்டேன். உன்னை நிரந்தரமாக அடைவதற்காக" என்றார் வியாஸ்.

நான் மயங்கிச் சரிந்தேன்.

நான் மறுபடி எழுந்தபோது இன்னும் வியாசின்

எதிரிலேயேதான் இருந்தேன். ஒரு கண நேரத்திற்கு உணர்வே இன்றிச் சரிந்திருக்கிறேன்.

"என்ன சொல்கிறீர்கள் வியாஸ்?"

"உன்னை அடைவதற்கு எனக்கு வேறு வழி தெரியவில்லை. பரிமளா உயிரோடு இருக்கும் வரை நீ என் மனைவியாக முடியாது. அதனால்தான்..."

"எப்படி?"

"அதெல்லாம் எதற்கு இப்போது? பரிமளா இல்லை. செத்துப் போய்விட்டாள். நீ வந்துவிடு, என் வீட்டின் ராணியாக."

இனிமேலா? வியாசுடனா?

திடீரென்று வியாசின் மேல் ஒரு வெறுப்பு வந்தது. இன்றைக்கு எனக்காக மனைவியைக் கொன்றதாகச் சொல்கிறவர், நாளைக்கு இன்னொரு பெண்ணுக்காக என்னைக் கொல்லமாட்டார் என்று எப்படி நம்புவது?

அவருக்கும், எனக்கும் இடையில் இருந்த ஒரு பந்தம் திடீரென்று திரை அறுந்த மாதிரி அறுந்து போனது.

கொஞ்ச நஞ்சம் இருந்த ஒரு பரிசீலனையும் அகன்று போய், நான் விறைப்பானேன்.

"ஸாரி வியாஸ். நான் உங்களுடன் வரப் போவதில்லை" என்றேன்.

வியாஸ் அதிர்ந்து போய் என்னைப் பார்த்தார். நான் சொன்ன வார்த்தைகளை அவரால் நம்ப முடியவில்லை.

"ஏன் உஷா?"

"என்னால் இனிமேல் உங்களுடன் வாழ்க்கை நடத்த முடியாது."

"அதுதான் ஏன் என்று கேட்டேன்?" அவர் குரல் இப்போது நடுங்கத் தொடங்கி இருந்தது.



"என் வாழ்க்கையில் இப்போது இன்னொருவர் இருக்கிறார்."

"நிஜமாகவா?"

"ஆம்"

"கல்யாணம்?"

"நடக்கப் போகிறது! திங்கள் அன்று"

"என்னைவிட இளைஞனா?"

"ஆமாம்"

"அதனால்தான் அவனை நீ..."

"வியாஸ். கொச்சையாகப் பேசாதீர்கள். என் வாழ்க்கையை முடிவு செய்ய எனக்கு உரிமை இல்லையா?"

அவர் திடீரென்று உடைந்து போன மாதிரி தெரிந்தார்.

"ஓ.கே. லீவ் மீ."

"வியாஸ்"

"லீவ் மீ உஷா. போ. போய்விடு. என் கண் முன்னால் இருக்காதே. போய்விடு! கெட் அவுட்."

வியாசின் ரத்த அழுத்தம் கொஞ்சம் கொஞ்சமாக ஏறி, அவர் முகத்தில் ரத்தம் பாய்ந்தது. சிவந்து அவர் கத்தத் தொடங்கினார்.

நான் எழுந்து வந்துவிட்டேன்.

நான் பூரண சுதந்திரத்துடன் இருக்கிறேன். அலுவலகம் போனேன். சாப்பிடாமல் திரும்பி வந்ததால் பசித்தது. பரவாயில்லை. மனம் ஓரளவு தெளிவாக இருக்கிறது. சாப்பாடு வேண்டாம்.

"மாமாவைப் பார்த்துவிட்டாயா?" என்று கேட்டார் திவாகர்.

தலை அசைத்தேன்.

“சாயங்காலம் உனக்கு ஒரு 'நெக்லஸ்' வாங்கித் தரப் போகிறேன். ஆபீசில் இருந்து நேரே போகலாம்.”

“சரி” என்றேன். இனி திவாகரை நான் பார்க்கும் பார்வையில் றுத்தல் இருக்காது. அவரோடு போனால் குற்றவுணர்வு இருக்காது.

மாலையில் நகைக் கடைக்கு போனோம். எனக்குப் பிடித்த சைனில் ஒரு செயின் வாங்கிக்கொண்டு, ஒட்டலுக்குப் போய் ாப்பிட்டோம்.

பைக்கில் திவாகரின் பின்னால் அமர்ந்து உரிமையுடன் இடுப்பைப் பற்றி பிளாட் திரும்பி வந்து சேர்ந்தேன்.

மணி அடித்ததும் நாராயணி கதவு திறந்தாள். என்னையும், ன் பின்னால் நின்ற திவாகரையும் பார்த்தாள். முகம் வெளிறி இருந்தாள்.

“சுதாமதி...” என்றாள் தடுமாறி.

பக்கென்றது. “எங்கே சுதா... சுதா எங்கே? என் கண்ணுக்கு ன்ன ஆயிற்று?” என்று கேட்டேன்.

“ஒரு வழுக்கைத் தலை ஆள் வந்தார். வியாஸ் என்று பெயர் சான்னார். சுதாமதிக்கு அவர்தான் அப்பா என்று சொல்லி, அவளைக் கூட்டிக்கொண்டு போனார்”– முகம் வெளிற, நாக்குழற ாராயணி சொன்னாள்.

சுதாமதியை வியாஸ் கூட்டிக்கொண்டு போய்விட்டாரா?

'சுதா. என் கண்ணே. நீ இல்லாமல் எனக்கு மட்டும் எதற்கு யிர்? நிரந்தரமாக உறங்கிப் போகிறேன். வேண்டாம். நான் செத்துப்போகிறேன். நான் செத்துப்போகிறேன்.'

நான் திரும்பினேன். பால்கனி சுவர் என் கண்ணில் பட்டது. ரே வழி. அதில் ஏறி குதித்துவிட்டால் போதும். என் துன்பம்



அத்தனையும் ஒழிந்துவிடும். நான் அந்தச் சுவரை நோக்கி ஓடினேன்.

## 8

சுதாமதியின் அப்பாவா? வியாசா? யார் அது?

நான் உள்ளுக்குள் கேள்விகளை முடிச்சுகளாக்கிக் கொண்டிருந்தபோது, உஷாமதி பால்கனி சுவரை நோக்கி ஓடினாள். அவள் முகத்தில் இருந்த ஆவேசம், கோபம், தீவிரம், வெறி எல்லாமாகச் சேர்ந்து என்னைப் பயமுறுத்தின.

உஷாமதி செத்துப் போகப் போகிறாள். அவள் எனக்கு இல்லாமல் போகப் போகிறாள்.

“உஷா” என்று கத்தினேன். அதே வேகத்தில் திரும்பிப் பாய்ந்து பால்கனி சுவரில் உஷா ஏறிய நேரத்தில் அவள் இடுப்பைப் பற்றினேன். இழுத்தேன். அவள் திமிறினாள்.

“விடுங்கள் திவாகர். நான் உயிர் வாழத் தகுதியற்றவள்” என்று கீழே குதிக்கப் பார்த்தாள். நான் அவளை வலுக்கொண்ட மட்டும் பற்றி இழுத்து, ஓர் அறை விட்டேன்.

மயங்கினாள். அவளை அப்படியே சுமந்து வந்தேன். அவள் படுக்கையில் அவளை உறங்க வைத்தேன். அவள் முகத்தில் வேதனைத் தீற்றல்கள்.

நாராயணி 'பிரிட்ஜி'லிருந்து தண்ணீர் கொண்டு வந்தாள். நான் அவள் முகத்தில் தெளித்தேன். விழித்தாள். என்னைப் பார்த்தாள்.

“திவாகர்” என்று கதறினாள். “நான் பொய்களால் கோட்டை கட்டிவிட்டேன் திவாகர். எனக்குத் தண்டனை கிடைத்துவிட்டது. என் உயிர் என்னை விட்டுப் பிரிந்துவிட்டது” என்று என் மார்பில் சாய்ந்து கதறினாள்.





நான் அவள் முதுகை வருடினேன்.

“உஷா, என்ன நடந்தது சொல். நிதானமாகச் சொல். நாம் ஒரு வழி கண்டுபிடிக்கலாம்” என்றேன்.

அவள் அழுகையைத் தொடர்ந்தாள்.

“சொல் உஷா. பிளீஸ்.”

உஷா நிமிர்ந்து அமர்ந்தாள். கொஞ்சம் கொஞ்சமாக அவள் இத்தனை நாள் மறைத்து வைத்திருந்த அவளுடைய மறுபக்கத்தை எனக்குக் காட்டத் தொடங்கினாள்.

உஷா சொல்லி முடிக்கும்போது அழைப்புமணி அழைத்தது. நாராயணி போய்த் திறந்தாள்.

“சுதாமதி” என்ற நாராயணியின் வியப்புக் குரல் என்னைத் தாக்கியது.

எழுந்து ஓடினோம்.

வியாஸ் தோளில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தையுடன் உள்ளே நுழைந்தார்.

அவளைப் படுக்கையில் படுக்க வைத்தார். என்னைப் பார்த்தார்.

“நீதான் இவளை மணக்கப் போகும் அதிருஷ்டசாலியா? வாழ்த்துகள்” என்று எனக்கு கை நீட்டினார். பற்றினேன்.

“ஸாரி. உங்களை எல்லாம் கொஞ்சம் ‘டென்ஷனி’ல் ஆழ்த்திவிட்டேன். என் குழந்தையுடன் கொஞ்ச நேரம் கொஞ்ச வேண்டும் போல் இருந்தது. அதனால்தான் அவளை தூக்கிக்கொண்டு போனேன். யோசித்துப் பார்த்தால் நான் இப்போது உஷாவை அடைய நினைப்பது தப்பு என்று தோன்றுகிறது. நான் விலகிப் போகிறேன். வாழ்க்கையில் இருந்தே விலகிப் போகிறேன். செத்துப் போய்விடுவேன் என்று நினைக்காதீர்கள். ரிஷிகேஷம், ஹரித்வார் என்று போய் என்

மிச்ச நாட்களைக் கழிக்கப் போகிறேன். எல்லாம் மாயை என்பது இப்போதுதான் எனக்குப் புரிந்தது. வாழ்த்துகள். நான் போகிறேன்."

வியாஸ் சரேலென்று விலகிவிட்டார்.

உஷா கதவை வெறித்தாள். சுதாவைப் பார்த்தாள். என்னைப் பார்த்தாள். என் மார்பில் சாய்ந்தாள்.

"என்னை மன்னிப்பீர்களா திவாகர்?"

"நீ என்ன தப்பு பண்ணினாய்?"

"என் கடந்த கால கறைகள்..."

"சே. உன் இறந்த காலம் எனக்கு அவசியமில்லை. எனக்கு இன்றைய உஷாமதிதான் வேண்டும்" என்று அவளை இறுக அணைத்தேன். முத்தமிட்டேன்.

நாராயணி வெட்கிக்கொண்டு சமையலறைக்கு ஓடினாள்.

உஷா கண்களை மூடி இருந்தாள்.

"உயிரே" என்றேன்.

"ம்"

"உறங்காதே."

"ஏனாம்?"

"வாழ்க்கை வாழ்வதற்கு உஷா. தூங்குவதற்கு இல்லை. கண் விழி. என்னைப் பார். என்னை மோகி. என்னை முழு மனதுடன் ஏற்றுக்கொள்."

உஷாமதி கண்களைத் திறந்தாள்.

அவள் இதழ்கள் தாகத்துடன் என் இதழ்களைத் தேடி வந்தன.

**முற்றும்**

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.